Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 16 புதன்கிழமை (31-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:35

# சமூகச் சீரழிவுகளைத் தடுக்க தீவிர விழிப்புணர்வுப் பிரசாரம்



## அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31

தமிழ்ச் சமூகத்தில் திட்டமிட்டு புகுத்தப்பட்டிருக்கும் சீரழிவுச் செயல்களைக் கட்டுப்படுத்தி எமது இளைய தலைமுறையை அவற்றில் இருந்து பாதுகாப்பதற்காக விழிப்புணர்வுப் பிரசாரங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்படும். அதன் முதல் நடவடிக்கைதான் எய்ட்ஸ"க்கு எதிரான பிரசாரங்கள்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் இவ்வாறு அறிவித்தார்.

கடந்த 23ஆம் திகதிமுதல் எய்ட்ஸ் விழிப்புணர்வு நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர், தமிழீழ சுகாதார சேவையினர் இணைந்து நடத்தினர். இது தொடர்பாக விளக்கம் அளிக்க நேற்றுப்பிற்பகல் செய்தியாளர் சந்திப்பு ஒன்று யாழ். மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் இடம்பெற்றது. அதில் அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தங்கன் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

'தேசியத் தலைவரின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட எய்ட்ஸ் விழிப்புணர்வு நடவடிக்கைகளினால் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

போதைவஸ்துப்பாவனை, ஆபாசப்படங்கள் பார்த்தல், பெரியோரை மதியாமை போன்ற செயற்பாடுகள் எமது இளஞ்சந்ததியிடம் அதிகரித்துக்காணப்படுகின்றது. இவற்றுக்கு காரணம் சிறிலங்கா இராணு (02ஆம் பக்கம் பார்க்க)

### சமாதான முன்னெடுப்புகள் தடைப்பட்டிருப்பதால்

# அரசியல் நெருக்கடி தொடரக்கூடாது; அமெரிக்க அரசாங்கம் அழுத்தம்!

## மிலிந்த-ஆர்மிடேஜ் பேச்சில் இது தொடர்பாக வலியுறுத்து

வாஷிங்ரன்,டிசெம்பர்31

**இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஆரம்பிக்க வழிவகுக்கும் அதிகாரப் பொறுப்புக்கள் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான இன்றைய அரசியல் நெருக்கடி தொடர்வதை அனுமதிக்க முடியாது எனவும் அமெரிக்கா அழுத்திக் கூறியுள்ளது.**

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்தித்து அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் நடத்திய பேச்சின்போதே அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டது.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருக்கும் அமைச்சர் மொறகொடவை அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ் கடந்த 29 ஆம் திகதி சந்தித்தார். இலங்கையின் சமாதானப் பேச்சுக்கள் உட்பட பலதரப்பட்ட பரஸ்பர விடயங்கள் குறித்து இருவரும் பேச்சு நடத்தினர். இலங்கையின் 20 வருட உள்நாட்டுப் போருக்குத் தீர்வு காண்பதில் அமெரிக்கா கூடுதல் சிரத்தை (02ஆம் பக்கம் பார்க்க)

## ரயில்சேவையை ஓமந்தை வரை நீடிக்க வாய்ப்பு

வவுனியா,டிசெ.31.

கொழும்பு - வவுனியா இடையிலான ரயில்சேவை விரைவில் ஓமந்தை வரை நீடிக்கப்படும் சாத்தியம் உள்ளது. இது தொடர்பாக அரசின் உயர் மட்டக் குழு ஆராய்ந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, அமைச்சரவைச் செயலாளர் வேரகொட உட்பட அரசின் உயர்மட்டத்தின் அடங்கிய குழு நேற்று வவுனியா சென்றிருந்தது. வவுனியா அரசஅதிபர் கேகணேஸ் தலைமையில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்தக் குழுவினர் பங்கேற்றனர். தற்போது வவுனியா வரை இடம்பெறும் ரயில் சேவையை (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ வானொலியில் புத்தாண்டு நிகழ்ச்சி

கிளிநொச்சி,டிசெ.31

விடுதலைப் புலிகளின் தமிழீழ வானொலிச் சேவை சர்வதேச தமிழ் ஒலிபரப்பு நிறுவனங்களுடன் இணைந்து இன்று நள்ளிரவு 11.30 மணிமுதல் நாளை இரவு 10.30 வரை புத்தாண்டு வாழ்த்துச் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றினை நடத்தவுள்ளது

லண்டன் ஐ.பி.சி வானொலி, அவுஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கனடா தமிழ்ச் சேவை வானொலி, மற்றும் 'மீடியா வொய்ஸ்', தமிழ் நாதம் ஆகியவற்றின் இணையத்தளங்களின் ஊடாக தமிழீழ வானொலியின் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சி ஒலிபரப்பாகும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கில் கைதாகிக் காணாமற்போனவர் குறித்து

# மனித உரிமை ஆணைக்குழுவிடம் வடபகுதிப் பெண் மனு கையளிப்பு

வடக்கில் கைதாகிக் காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாட்டு மனு இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் நேற்று நேரடியாகக் கையளிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு வல்வெட்டித்துறைக் கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டபின் காணாமற்போன மகாலிங்கம் என்பவரின் சகோதரி மகாதேவி இந்த மனுவை ஆணைக்குழுவின் புலனாய்வுத்துறை இயக்குநர் நிமால புஞ்சிஹேவாவிடம் கையளித்தார்.

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி, மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், சட்டத்தரணி ஜெயரட்ணராஜா (மனித உரிமை-நிலையம்) ஆகியோர் இந் (16ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே ☞**

இன்றோடு நிறைவுபெறும் 2003ஆம் ஆண்டில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளின் தொகுப்புகள்.

## வீடுகள் கையளிப்பு

தென்மராட்சி,டிசெ.31

தென்மராட்சியில் உள்ள மந்துவில் மேற்கில் படையினர் நிலைகொண்டிருந்த வீடுகள் நேற்று அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

கிராம அலுவலர் முன்னிலையில படையதிகாரிகள் வீடுகளை உரிமையாளர்களிடம் கையளித்தனர்.

படையினர் அப்பகுதியில் இருந்து முற்றாக வெளியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# ஏ-9 பாதை இன்றுமட்டும் இரவு 9 மணிவரை திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.31

புத்தாண்டுதினத்தையொட்டி ஏ-9 பாதை ஊடான பயணிகள் போக்குவரத்து இன்றுமட்டும் இரவு 9 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. நீடிக்கப்பட்ட நேரத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் பிரசன்னத்தில் பயண நடவடிக்கைகள் இடம்பெறும்.

ஏ-9 பதையூடான பயணிகள் போக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படைக் கட்டளைத் தளபதிகள் மாற்றம்!

கடற்படையின் வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய கட்டளைத் தளபதி பதவிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்பதவிகளை வகிக்கும் ரியர் அட்மிரல்கள் மூவர் அப்பதவிகளிலிருந்து மாற்றப்பட்டு புதிய பதவிகளில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

வடக்கு கடற்படை கட்டளைத் தளபதியான ரியர் அட்மிரல் நந்தன துடு (16ஆம் பக்கம் பார்க்க)




இலவச ஆயுள் காப்புறுதிக் காப்பு!

NSB இன் சேமிப்புக் கணக்குகள் ஒன்றில் ரூபா.10,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பேணுவதனூடாக ரூபா.300,000/- வரையிலான இலவச ஆயுட் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

(இதற்கான வயது எல்லை 18 முதல் 70 வரை)

NSB தேசிய சேமிப்பு வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதங்களுக்கிடையிலான பதற்றத்தை தணிக்க

# தேசிய, மாவட்ட மட்டங்களில் சர்வமதச் சமாதானக் குழுக்கள்

மதங்களுக்கிடையிலான பதற்றத்தைத் தூண்டி நாட்டை அதலபாதாளத்தில் தள்ளிவிடுவதைத் தடுப்பதற்காக புத்தசாசன, கிறிஸ்தவ விவகார, இந்து விவகார, இஸ்லாம் விவகார அமைச்சுக்களின் ஏற்பாட்டில் தேசிய மற்றும மாவட்ட மட்டங்களில் சர்வமத சமாதானக குழுக்களை அமைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அரச பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள மதங்களுக்கிடையிலான பதற்ற நிலையை அரசு உன்னிப்பாக அவதானித்து வருகிறது. கங்கொடவில சோமதேரர் மறைவு குறித்து மக்கள் சோகமுற்றுள்ள வேளையில் எதிர்பாராத சம்பவங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது துரதிர்ஷ்டமானதாகும்.

நீண்ட காலமாக தேரர் போதித்த போதனைகளுக்கு எதிராக மதபேதங்களைக் கட்டவிழ்த்துவிட சிலர் எடுக்கும முயற்சிகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கையிலிருந்து வேறு மதத் தலைவர்களைப் பாதுகாக்க பல பௌத்த பிக்குகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபட வேண்டாமென ஊடகங்கள் மூலம் மகாசங்கத்தினர் வேண்டுகோள் விடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இருந்தும், இந்த வேண்டுகோளை ஏற்காத இந்தக் கும்பல்கள் நாட்டில் ஆங்காங்கே கிறிஸ்தவ, முஸ்லிம் வணக்கஸ் தலங்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர்.

பாதுகாப்பு பொறுப்புக்களை ஏற்றுக கொண்டுள்ள ஜனாதிபதியின் வேண்டுகோளின்படி சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின்முன் கொண்டு வரவேண்டியது பாதுகாப்புத் தரப்பின் பொறுப்பாகும். அப்படிச்செய்யாவிட்டால் இக்கும்பல்கள் தொடர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டு நாட்டில் அராஜக நிலையை தோற்றுவிக்கும்

-இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மு.கா. துணைத் தலைவர் மஜீதின் சாய்ந்தமருது வீடுமீது கல்வீச்சு!

முஸ்லிம் காங்கிரஸ் மூத்த துணைத் தலைவரும், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் பிரத்தியேகச் செயலாளருமான ஏ.எல். அப்துல் மஜீதின் சாய்ந்த மருது வீடு கல்வீச்சுக்கு இலக்கானது. இதனால், அங்கு இரவு நேரத்தில் பொலீஸார் காவலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில் சாய்ந்தமருது ஓராபி பாஷா வீதியில் அமைந்துள்ள அப்துல் மஜீதின் வீடுமீது இனந்தெரியாத நபர்களினால் சரமாரியாக கல்வீச்சு நடத்தப்பட்டது. வீட்டின் சில ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கியுள்ளன.

இதுதொடர்பாக கல்முனைப் பொலீஸில் அவர் முறைப்பாடு செய்துள்ளார். தனது வீட்டிற்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான சேதம் ஏற்பட்டிருக்கிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை மு.கா.அதியுயர் பீட உறுப்பினரும், "ரெப்பியா" நிறைவேற்றுப் பணிப்பாளருமான சட்டத்தரணி எஸ். நிஜாமுதீனின் சாய்ந்தமருது வீடு குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது தெரிந்ததே.

இவ்வாறான தொடர்ச்சியான தாக்குதல் சம்பவங்களினால் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களும், அமைச்சர் ஹக்கீமின் அமைச்சு மற்றும திணைக்களங்களில் பதவி வகிப்போரும் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

# சமாதானக் குழுக்களை நிறுவுமாறு ஐ.ஜீ.பிக்கு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, டிசெ.31

மதபிணக்குகளின் போர்வையில் நாட்டின் சில இடங்களில் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் அமைதியற்ற சூழ்நிலையைப் போக்க நாடு முழுவதிலும சமாதானக் குழுக்களை நிறுவுமாறு, ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா பொலீஸ்மா அதிபரைப் பணித் திருக்கிறார்.

இதன்படி சமயத் தலைவர்களையும், சமூகப் பெரியார்களையும், சிவில் அமைப்புக்களின் முக்கியஸ்தர்களையும் கொண்ட சமாதானக் குழுக்களை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று பொலீஸ்மா அதிபா இந்திராடி சில்வா தெரிவித்திருக்கிறார்.

அமைதியற்ற சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கும் பாதுக்க, மகரஹம ஆகிய இடங்களில் பொலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருப்பதாகவும் பொலீஸ்மா அதிபர் தெரிவிக்கின்றார்.

# மாகாண அரச அலுவலர்களின் இடமாற்றங்கள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம்,டிசெ.31

வடக்கு - கிழக்கு மாகாண இணைந்த சேவைகளைச் சேர்ந்த அலுவலகர்களின் வருடாந்த இடமாற்றம் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது. மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம் இதனை அறிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் 11ஆம் திகதிய கடிதமூலம் வழங்கப்பட்ட இடமாற்றங்களும் கடந்த 10ஆம் திகதிய கடித மூலம் வழங்கப்பட்ட மேன்முறையீட்டுத் தீர்மானங்களும் அதனுடன் தொடர்புடைய இடமாற்றக்கட்டளைகளும் பிற்போடப்பட்டுள்ளன என்று அவர் அறிவித்துள்ளார்.

பொது எழுதுநர் சேவை அதிசிறப்பு வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களும் பிற்போடப்பட்டுள்ளதாக செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றங்களை இரண்டு மாதங்களுக்கு நிறுத்தி வைப்பதற்கு வடக்கு - கிழக்கு ஆளுநர் தீர்மானித்துள்ளார் என்று ஏற்கனவே 'உதயன்' செய்தி வெளியிட்டமை தெரிந்ததே

(ம-10)

# பேரூர் ஆதீன முதல்வர் இன்று நாவலர் மண்டபத்தில் அருளுரை

யாழ்ப்பாணம்,டிசெ.31

இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் அருளுரை நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இன்று மாலை 5.30 மணிக்கு நடைறெவுள்ளது.

நல்லைஆதீனத்தில் இருந்து அடிகளார் மங்களவாத்தியம் சகிதம் நாவலர் மணிமண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப்படுவார்.

இந்துசமய விவகார அலுவல்கள அமைச்சின் அழைப்பின் பேரில் அடிகளார் இங்கு வருகைதந்துள்ளார். இன்றைய இந்தநிகழ்வு அமைச்சின் யாழ்மாவட்டப் பிராந்திய அலுவலகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி காலை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு விஜயம் செயயும் சுவாமிகள், ஆலய தரிசனம் மேற்கொண்டபின் பக்தர்களுக்கு அருளுரை வழங்குவார். அன்றையதினம் மாலை 3 மணிக்கு குப்பிழான் சந்தியிலிருந்து ஆலயத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு சொக்கர் வளவு சோதி விநாயகர் ஆலயத்தில் அருளுரை வழங்குவார்.

2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் ஆலயதரிசனம மேற்கொண்டபின் அவ் ஆலயத்தில் பக்தர்களுக்கு அருளுரை நிகழ்த்துவார். தொடர்ந்து 9 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்திலும், முற்பகல் 11மணிக்கு தொண்டமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் திருவாசக விழாவிலும் சுவாமிகள் சிறப்புரை நிகழ்த்துவார்.

அன்றையதினம் மாலை 4 மணிக்கு சைவகுருமார் அர்ச்சக சபையினர் சுவாமி களுக்கு வரவேற்பு வைபவம் ஒன்றை வழங்கவுள்ளனர். தொடர்ந்து திருநெல் வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத் தில் சுவாமிகளின் அருளுரை இடம் பெறும்.

3 ஆம் திகதி காலை 8 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்திலிருந்து சுவாமிகள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு யோகர் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் தரிசனம் மேற்கொள்வார். தொடர்ந்து கொழும்புத்துறை வதிரீட விநாயகர் ஆலயத்தில அடிகளாரின் அருளுரை இடம்பெறும்.

அன்றையதினம் மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் சுவாமிகளுக்கு சிறப்பான வரவேற்பு வைபவம் ஒன்றை வழங்குவர். தொடர்ந்து நிராவியடி நாவலர் மணி மண்டபத்தில் சுவாமிகளின் அருளுரை இடம் பெறும்.

## படகுச் சேவை நேரம் நாளைமுதல் மாற்றம்

நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானுக்கும் இடையிலான படகுச் சேவையின் நேரங்கள் நாளை முதலாம் திகதியில் இருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர் எஸ். கோபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில நடைபெற்ற நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.இதன்படி நெடுந்தீவில் இருந்து காலை 7.30 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் படகுச் சேவை இடம்பெறும் குறிகட்டுவானில் இருந்து காலை 10 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் படகுச் சேவை இடம்பெறும். தற்பொழுது நெடுந்தீவில் இருந்து காலை 7.30 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்கும் குறிகட்டுவானில் இருந்து காலை 10.30 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் படகுச் சேவை இடம்பெற்றுவருகின்றது.

## புத்தாண்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.31

புத்தாண்டைபொட்டி நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மேற்தரக் கிளையில் விசேட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதேவேளை-

இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கில் இன்றையதினம் ஒரு லட்சம் ரூபா அல்லது அதற்கு மேல் பணம் வைத்திருப்பவர்களில் 200 பேருக்குச் சகல வசதிகளுடனும் இந்தியாவில்பௌத்த புனித ஸ்தலங்களுக்குச சென்று திரும்பும் வாய்ப்பு அல்லது 75 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படும் என்று அறிவிககப்பட்டுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.31

புத்தாண்டையொட்டி யாழ். மரியன்னை பேராலயத்தில் இன்று புதன்கிழமை இரவு 11.45மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நள்ளிரவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

புத்தாண்டு தினமான நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு முதல் திருப்பலியும் 8 மணிக்கு இரண்டாம் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.

(ம-10)

## நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.31

பாடசாலை ஆசிரியர்களுக்கான குறுகிய கால தகவல் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டத்தின் நிறைவு நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் (P.I) நடைபெறவுள்ளது.

மனித ஆற்றல் அபிவிருத்தி கல்வி மற்றும் கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மேற்படி நிகழவுக்கு உலகவங்கி நிதியுதவி வழங்கியுள்ளது.

# விளையாட்டு

## நியூஸிலாந்து அணி தோல்வி

நியூஸிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம், இரு போட்டிகள் கொண்ட இத் தொடரின் வெற்றியையும் பாகிஸ்தான் அணி கைப்பற்றியுள்ளது.

வெலிங்டனில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெறுவதற்கு இரண்டாவது இனிங்ஸில் 274 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

நான்காவது நாளான ஆட்ட முடிவின் போது அவ்வணி 3 விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. போட்டியின் இறுதிநாளான நேற்று அவ்வணி மேலும் 28 ஓட்டங்கள் மட்டுமே பெறவேண்டியிருந்தது.

அணித்தலைவர் இன்ஸமாம் உல்ஹக், உபதலைவர் யூஸுப் யுஹானா இருவரும் 3.5 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதனால், 7 விக்கெட்டுகளால் பாகிஸ்தான் அணிவென்றது. இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக சொஹைப் அக்தார் தெரிவானார்.

இத்தொடரின் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இதனால், இத்தொடரில் 1 - 0 என்ற விகிதத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுள்ளது. இவ்வெற்றியின் மூலம் ஐ.சி.சி. டெஸ்ட் தரவிசையில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது பாகிஸ்தான் அணி.

## ஆஸ்திரேலிய அணி வெற்றி

இந்திய அணியுடனான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்களால வெற்றிபெற்றது.

மெல்போர்னில் நடைபெற்ற இப் போட்டியின் இறுதிநாளான நேற்றுத் ஆஸ்திரேலிய அணி தனது இரண்டவது இனிங்ஸை ஆரம்பித்து அவ்வணி வெற்றி பெறுவதற்கு 95 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்பட்டன. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜஸ்ரின் லாங்கர் 2 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். எனினும் மத்தியூஹைடனும், ரிக்கி பொன்ரிங்கும் மேலதிக விக்கெட் இழப்பைத் தடுத்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

ரிக்கிபொன்ரிங் இப்போட்டியில் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார்.

இவ்வணிகளுக்கிடையிலான 4 போட்டிகள் கொண்ட இத்தொடரில் தற்போது இரு அணிகளும் சம நிலையில் உள்ளன.

நான்காவதும் இறுதியுமான போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## சமாதானம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.31

சர்வோதயம் அமைப்பு நடத்தும் சமாதான நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று புதனகிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்வை. எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக தெகிலிகினிய அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த 120 பேர் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

சர்வோதயம் நிறுவன யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்கனகரட்ணம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழவில் யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த [illegible]

(ம-9)

## சமூகச் சீரழிவுகளை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தின் திட்டமிட்ட செயற்பாடுகள் தான்.

எமது மக்களின் நலன்களுக்காகவே நாம் போராடிவருகின்றோம். மக்கள் மத்தியில் திணிக்கப்படும் கலாசாரச் சீரழிவுக்கு எதிராகவும் போராட வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு. அந்த வகையில் நாம் விழிப்புணர்வுப் பணிகளை முன்னெடுத்துள்ளோம். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி கலாசார சீரழிவுகளில் இருந்தும் கொடுர நோய்களில் இருந்தும் மக்களைக் காப்பாற்ற விழிப்புணர்வுப் பணிகளில் எழுச்சிப் பேரவையினரும் பொது அமைப்பினரும் தொடர்ந்து ஈடுபடுவார்கள் இதற்கு ஊடகங்கள் ஊக்கம் கொடுக்கவேண்டும்.

நாம் முன்னெடுக்கும் 'எய்ட்ஸ்' விழிப்புணர்வு நடவடிக்கைகளை சிலர் விமர்சிக்கலாம். பட்டம், பதவிகளில் ஆசை கொண்டவர்களே அவ்வாறு விமர்சிக்கிறார்கள். ஆனால், இத்தகைய விமர்சனங்களுக்காக மக்களின் நலனை நம்மால் விட்டுக் கொடுக்க முடியாது - என்றார் அவர். (ஓ-3)

## அரசியல் நெருக்கடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருப்பதாக பிரதி ராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ் இச்சந்திப்பில் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுகளை பிரதமர் மீண்டும் ஆரம்பிக்க வழிவகுக்கும் அதிகாரப் பொறுப்புக்கள் பற்றிய பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படும்வரை சமாதான முயற்சி மீது எதிர்மறையான ஒரு தாக்கம் இருந்துவரும் என்றும் அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் இன்றைய அரசியல் தேக்கநிலை தொடருவதை அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்திருக்கும் அவர், இலங்கையின் நிலைமை குறித்து ஆராய்ந்தபின்னர் முன்னேறிச் செல்லக்கூடிய ஒரு வழியை வகுப்பதற்காக இலங்கைக்கு உதவும் ஏனைய இணைத்தலைமைத்துவ நாடுகளான நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றுடன் தான் ஆலோசனை நடத்துவதாகவும் அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் மேலும் கூறியிருக்கிறார்.

இவர்கள் இருவருக்குமிடையிலான சந்திப்புக் குறித்து அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள பிரதிப் பேச்சாளர் அடம் எரெலி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

சமாதானத்தைக் கண்டடைவதற்கான இலங்கையின் முயற்சியின் பின்னால் அமெரிக்கா நிற்பதாகவும், 20 ஆண்டு காலப் போரை முடிவுக்குக் கொண்டுவர இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் விரைவில் ஆரம்பமாவதைக காண விரும்புவதாகவும் அறிக்கையில தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அரங்கில்

# போர், பூகம்பம், விபத்து கிலியை ஏற்படுத்திய ஆண்டு

**ஜனவரி 28:**
இஸ்ரேல் பொதுத்தேர்தல் நடந்தது. தேர்தலில் ஷெரோனின் லிக்குட் கட்சி வெற்றிபெற்றபோதும், ஆட்சியமைப்பதற்குரிய அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. இதனால், அங்கு கூட்டணி ஆட்சி அமைக்கப்பட்டது.

**பெப்ரெவரி 01:**
விண்வெளி ஆராய்ச்சிக்குப் புறப்பட்ட நாஷாவின் கொலம்பியா விண்கலம் தரையிறங்கும்போது, ஏழு விஞ்ஞானிகளுடன் வெடித்துச் சிதறி துகள்களானது. தரையிறங்குவதற்கு 16 செக்கன்கள் இருந்த நிலையில் அது வெடித்துச் சிதறியமை உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அதுமட்டுமன்றி விண்வெளியில் பயணஞ்செய்த முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்ற இந்தியாவைச் சேர்ந்த கல்பனா சாவ்லாவும் இந்த அனர்த்தத்தில் கொல்லப்பட்டார்.

**பெப்ரெவரி 09:**
உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரில் ஆரம்பமாகியது.

**மார்ச் 01:**
நியூயோர்க் உலக வர்த்தகமையத் தாக்குதலில் தொடர்புடைய முக்கிய சூத்திரதாரி காலித்ஷேக் முகமது பாகிஸ்தானின் கராச்சி நகரில் கைதுசெய்யப்பட்டார்.

**மார்ச் 08:**
சேர்பிய நாட்டு பிரதமர் ஜோன் டிஜின்புக் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**மார்ச் 20:**
21ஆம் நூற்றாண்டின் வரலாற்றில் முக்கிய இடம்பிடித்துவிட்ட ஈராக் போர் ஆரம்பமாகியது. முதன்முதலாக இன்றைய தினமே பக்தாத்தில் அமெரிக்க போர் விமானங்கள் குண்டு மாரி பொழிந்தன. அமெரிக்காவுக்கு ஆதரவாகப் பிரிட்டிஷ் படைகளும் ஈராக் களத்தில் இறங்கின.

**மார்ச் 23:**
உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணியும் இந்திய அணியும் மோதிக் கொண்டன. இதில் ஆஸ்திரேலிய அணி அபாரமாக விளையாடி சாம்பியன் பட்டத்தைத் தட்டிச்சென்றது.



வீழ்ச்சி...

**ஏப்ரல் 04:**
பக்தாத் சர்வதேச விமான நிலையத்தை அமெரிக்கக் கூட்டுப்படை கைப்பற்றியது. இந்த விமான நிலையத்தைக் கைப்பற்றியதும், சதாம் ஹுசைனின் ஆட்சி ஈராக்கில் முடிந்துவிட்டதாக அமெரிக்கா அறிவித்தது.

**ஏப்ரல் 14:**
சிரியா எல்லையில் சதாம் ஹுசைனின் தம்பி அமெரிக்கப் படையிடம் பிடிபட்டார்.

**மே 01:**
துருக்கியில் நில நடுக்கம் ஏற்பட்டு 200 பேர் உயிரிழந்தனர்.

**மே 22:**
அல்ஜீரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 800 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

**ஜூன் 02:**
உலகை உலுக்கிய 'சார்ஸ்' நோய் முதன்முதலில் அடையாளம் காணப்பட்டது. மனித குலத்துக்கே சவாலாக விளங்கிய இந்நோய், சீனாவில்தான் முதன் முதலில் தோன்றியது. ஜப்பான், தாய்வான், ஹொங்கொங், சிங்கப்பூர், கனடா, மலேசியா உட்பட ஏராளமான நாடுகளை இந்நோய் ஆட்டிப் படைத்தது.

**ஜூலை 08:**
உலகை கண்கலங்கவைத்த இரட்டைச் சகோதரிகளின் மரணம். ஈரானைச் சேர்ந்த தலை ஒட்டிப்பிறந்த 29 வயதுடைய இரட்டைச் சகோதரிகள் லாடன் - லாலே மரணித்த செய்தியைக் கேட்டதும் உலகம் முழுவதும் ஒன்றுசேர்ந்து கண்ணீர்விட்டது. ஜூலை 6ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து இரண்டு நாள்கள் இவர்களுக்கு அறுவைச்சிகிச்சை நடத்தது. துரதிர்ஷ்டவசமாக சிகிச்சை தோல்வியில் முடிந்தது.

**ஜூலை 22:**
சதாம் ஹுசைனின் புதல்வர்கள் உதய், குசய் சுட்டுக் கொல்லப்பட்டனர். இரண்டு மணிநேர நீண்ட சண்டைக்குப் பின்னர் திக்ரித்திற்கு அண்மையிலுள்ள வீடொன்றில்வைத்து அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

**ஒகஸ்ட் 13:**
லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லர் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். கிளர்ச்சிக் குழுக்களின் தாக்குதலை சமாளிக்க மேற்குலகின் அழுத்தத்திற்கு மத்தியில் அவர் பதவி விலகினார்.

**செப்ரெம்பர் 10:**
ஆப்கானிஸ்தான் போரின்பின் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்துவரும் ஒஸாமா பின்லேடனின் காட்சிகள் அடங்கிய ஒளிநாடாவை அல்-ஜெஸீரா தொலைக்காட்சி வெளியிட்டது. பின்லேடன் இறந்திருக்கலாம் என்று அமெரிக்கா கூறிவந்தமை இந்த ஒளி நாடா மூலம் பொய்ப்பிக்கப்பட்டது.



போரின் கொடுமை...

**ஒக்ரோபர் 01:**
இந்தியாவில் தீவிரவாதம் எந்த அளவிற்கு தலைவிரித்தாடுகிறது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் திருப்பதியில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவை குறிவைத்துக் குண்டுத தாக்குதல்.

**ஒக்ரோபர் 08:**
கலிபோர்னிய மாகாண ஆளுநர் தேர்தலில் அதிரடி நாயகன் ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர் பெரு வெற்றியீட்டினார். கலிபோர்னிய மாகாண ஆளுநராக இருந்த கிரேடேவிஸ் மீது லஞ்ச ஊழல் முறையீடுகள் எழுந்ததையடுத்தே, புதிய ஆளுநரைத் தேர்ந்தெடுக்க முடிவுசெய்யப்பட்டது. தேர்தலில் எவருமே எதிர்பாராத வகையில் ஹொலிவூட் அதிரடி அக்ஷன் நாயகன் ஆர்னோல்ட் ஷ்வாஸ்நேகர் பெருவெற்றிபெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட கவர்ச்சி நடிகை மேரி கேரி உட்படப் பலர் படுதோல்வியடைந்தனர்.


**ஒக்ரோபர் 10:**
ஈரானிய புரட்சிப்பெண் ஷெரின் இபாடிக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்தது.



வெற்றி...

**ஒக்ரோபர் 10:**
தீவிரவாதிகளை ஒடுக்கவென மத்திய அரசு கொண்டுவந்த 'பொடா' சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகக் கூறி 'பொடா அவசர சட்டம்' கொண்டுவரப்பட்டது. தனிநபருக்கு எதிராக தவறாக 'பொடா' சட்டம் பயன்படுத்தப்படுவதாக 'பொடா' மறு ஆய்வுக்குழு கருதினால் அந்த நபரை உடனே விடுதலைசெய்ய இந்தச்சட்டம் அதிகாரமளிக்கிறது.

**ஒக்ரோபர் 10:**
ஒலியைவிட அதிவேகமுடைய விமானம் எனக் கருதப்பட்ட 'கொன்கோட்' ரக விமானங்கள் பிரியாவிடை பெற்றன. பிரான்ஸிற்கும், லண்டனுக்கும் இடையே இந்த விமானங்கள் தமது கடைசிப் பயணத்தை மேற்கொண்டிருந்தன.



அழிவு...

**ஒக்ரோபர் 16:**
உகண்டாவில் சர்வாதிகார ஆட்சி நடத்திய இடி அமின் கோமாநிலையில் மரணமானார்.

**ஒக்ரோபர் 24:**
சூரியனிலிருந்து எரிமலைக் கொப்பளங்கள் போல் உருவாகிய அதிக உஷ்ணமுடைய வாயு பூமியைத் தாக்கியது.

**நவம்பர் 05:**
சவூதி அரேபியாவில் குண்டுகள் நிரப்பிய கார்கள் மக்கள் குடியிருப்புப் பகுதியில் தொடர்ச்சியாக வெடித்துச் சிதறின. இதில் முப்பதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

**நவம்பர் 20:**
சிறுவனுடன் தகாத உறவு வைத்துக்கொண்டார் என்று மைக்கல் ஜக்ஸனைக் கைதுசெய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு முன்பும் சிறுவர்களுடன் தகாத உறவு வைத்துக்கொண்டார் என்று முறையிட்டபோதும் இந்த முறையே அவரது பிரச்சினை பூதாகரமாகக் கிளம்பியது.

**நவம்பர் 23:**
மாணவப் பருவம் முதல் திராவிட இயக்கத்திலும், தி.மு. கழகத்திலும் முக்கிய பங்குவகித்த முரசொலிமாறன் மரணமானார்.

கருணாநிதியின் சிறந்த ஆலோசகராகவும், சிறந்த நாடாளுமன்றவாதியாகவும் இவர் திகழ்ந்தார். மூன்று முறைகள் கபினெட் அமைச்சராகவும், ஐந்து முறைகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், மூன்று முறைகள் மேல்சபை உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டவர். இதய நோயால் பாதிக்கப்பட்ட இவருக்கு, அமெரிக்காவில் சிகிச்சை நடந்தது. இவரது இறுதிச்சடங்கில் பிரதமர் வாஜ்பாய் உட்பட்ட இந்திய பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். இவரது மறைவு தமிழகத்திற்கு ஏற்பட்ட பெரியதோர் இழப்பு.

**நவம்பர் 27:**
அமெரிக்க ஜனாதிபதி புஷ் திடீரென - இரகசியமாக முன்னறிவித்தல் ஏதுமின்றி பக்தாத் விமான நிலையத்தில் தரையிறங்கினார். ஈராக் போரில் பங்குபற்றியுள்ள அமெரிக்க வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலேயே, அவர் இந்த இரகசிய விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

ஈராக்கில் அமெரிக்கப் படையினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துவந்த வேளையில் தனது குடும்பத்தினருக்கே தெரியாமல் புஷ் ஈராக் சென்றமை, உலகத்தின் பார்வையில் அவரது துணிச்சலை வெளிக்காட்டியிருந்தது.



தோல்வி....

**டிசெம்பர் 06:**
53ஆவது உலக அழகிப்போட்டி சீனாவில் நடந்தது. கம்யூனிஸ்ட்டு நாடான சீனாவில் முதல்முறையாக நடந்த உலக அழகிப்போட்டி இது. இந்த அழகிப்போட்டியில் 106 நாடுகளின் அழகிகள் கலந்துகொண்டனர்.

இதில் 19வயது அயர்லாந்து நாட்டு மாணவி ரோசன்னா டேவிசன் உலக அழகியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். கனடா நாட்டு அழகி நசானின் 2ஆவது இடத்தைப் பிடித்தார். சீன அழகி மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

**டிசெம்பர் 13:**
ஈராக் போரில் தோல்வி அடைந்து தலைமறைவான சதாம்ஹுசைனை 8 மாத தேடுதல் வேட்டைக்குப் பிறகு அமெரிக்க வீரர்கள் பிடித்தனர். 24 ஆண்டுகள் ஈராக்கில் ஒரு சக்திவாய்ந்த சர்வாதிகாரியாக ஆட்சிபுரிந்துவந்தவர் சதாம். திக்ரித் நகரில் உள்ள ஒருபண்ணை வீட்டில் 6 அடி நீளமும், 8 அடி அகலமும் உள்ள பதுங்குக்குழியில் வைத்து அவரை அமெரிக்க வீரர்கள் சுற்றிவளைத்துக் கைது செய்தனர். அப்போது அவர் கையில் துப்பாக்கி வைத்திருந்தாலும் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் சரண் அடைந்தார். அவரது கைது மர்மம் குறித்து பல சர்ச்சைகள் இன்னமும் எழுந்துள்ள வண்ணமேயுள்ளன.

ஒரு நாட்டுக்கே ஜனாதிபதியாக - செல்வச் சீமானாக - திகழ்ந்த சதாம், கைதுசெய்யப்படும்போது நீண்ட தாடியுடன் கலைந்த தலையுடன் காணப்பட்டார். பிடிபட்டது சதாம் தானா என்பதை உறுதி செய்ய மரபணு சோதனை நடத்தப்பட்டது.

பக்தாத் நகருக்கு கொண்டு செல்லப்பட்ட சதாம், அங்குள்ள விமான நிலையம் அருகே உள்ள இரகசிய இடத்தில் வைக்கப்பட்டார். சதாம் கைதை உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்கள் வரவேற்றனர்; ஈராக் மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

**டிசெம்பர் 15:**
பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பைக் கொலை செய்வதற்கு ராவல்பிண்டி நகரில் இரண்டாவது முறையாகவும் குண்டுத்தாக்குதல் நடந்தது. இதில் அவர் முன்னைய தாக்குதலில் உயிர்தப்பியது போன்றே அதிர்ஷ்டவசமாக மீண்டும் உயிர்தப்பினார்.

**டிசெம்பர் 26:**
ஈரானில் பூகம்பப் பேரழிவு காரணமாக 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கடந்த பத்து ஆண்டுகளில் நடந்த மிகப்பெரிய மனித அழிவாக இந்தச் சம்பவம் விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய LML (Pulser மொடல்) வெஸ்பா (சிறிது காலம் மட்டும் பாவித்தது) விற்பனைக்குண்டு. தொடர்பு: 140, பலாலி வீதி, (பரமேஸ்வராச் சந்தி) திருநெல்வேலி, யாழ்ப்பாணம் T.P 222 2478. (26538)

நெல்லு, வைக்கோல் போர் விற்பனைக்குண்டு. தொடர்பு: P.V.சூரியர், கல்லூரி வீதி, No.10, செல்வவேல், கொக்குவில் கிழக்கு. (26533)

பலாலி வீதி, கோண்டாவில் காளி கோயில் வீதியில் 150 மீற்றர் தூரத்தில் 13 பரப்பு 10குளி காணி முழுமையாகவோ பகுதிகளாகவோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா.கணேசரட்ணம சைவப்பிரகாசாலை ஒழுங்கை, திருநெலவேலி வடக்கு T.P. 011 2226601.(26457)

4 மாதங்கள் நிரம்பிய Great Dane ஆண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குமார் (ஆட்டோ) 15/7, பிரப்பங்குள லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் . (26553)

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் கிளாசிக் SL ஸ்கூட்டர் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.கங்காதரன், இல.6, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.(26552)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக கோழிகள் சுகாதார முறைப்படி உடன சுத்தம்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (26357)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு சுத்தஞ்செய்து வேணடிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No.:3529, 2867.(26519)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. தேறிய நிறை 250/- மட்டும் புதன், சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.குமரன் 227, பிறவுண் வீதி (நீர்க்குண்டுக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P 077-6180675. (26534)

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. விலை குறைக்கப்பட்டுள்ளது. தினமும சுத்தஞ்செய்து வேண்டிய அளவுகளில பெறலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி. (26562)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் விலைரூபா 42, Prima பேட்டுக் குஞ்சுகள விலை ரூபா 62. 05.01.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறை கிளையிலும் விநியோகிக்கப்படும் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (26356)

## காணி விற்பனைக்கு

தாவடியில் தாவடி மானிப்பாய் வீதியிலிருந்து இரண்டாவதாக அமைந்த 31/2 பரப்புக் காணி (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு:கு.பாஸ்கரலிங்கம், மஞ்சத்தடி, காரைக்கால் வீதி, இணுவில். (26535)

## வீடு விற்பனைக்கு

புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. T.P. 0777 570279, 0777 305533 (சி-31984)

## ஆங்கிலம்

பல்கலை மாணவர்களுக்கும் தரம் 6-12 மாணவர்களுக்கும் ஆங்கில வகுப்புகள் வெள்ளிக்கிழமை (02.01.2004) ஆரம்பமாகிறது. வீடுகளுக்கும் வருகை தந்து கற்பிக்கப்படும். தொடர்பு: க.நாகேந்திரம், 34/4(புதியது 82/24), செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (26491)

## நாயைக் காணவில்லை

13 வருடங்களாக செல்லமாக வளர்த்த பிறவுண் கலரும், சடைவாலும் ஒருசெவி மடிந்தும் ஒருசெவி நிமிர்ந்தும் கழுத்தில் பட்டியிடப்பட்டதுமான "ஸ்பாக்" என்ற நாயை 23.12.2003 முதல் காணவில்லை. இதனைக் கண்டவர்கள் இல.18, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள செல்லா என்பவருக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.:3252,2429. (26550)

## மின்கட்டணம் அதிகரிக்கும் வாய்ப்பு

கொழும்பு,டிசெ.31

அரசின் வரவு - செலவுத்திட்ட யோசனையின் மூலம் பெறுமதிசேர் வரி 10 வீதம் முதல் 15 வீதம்வரை உயர்த்தப்பட்டுள்ளமையால் மீண்டுமொரு தடவை மின்கட்டணங்களில் மீளாய்வு மேற்கொள்ள வேண்டியிருப்பதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான பேச்சுக்கள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன. எதிர்காலத்தில் மின்கட்டணங்களில் ஒருசில மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வீடுகளில் பாவிக்கப்படும் மின் அலகு ஒன்றிற்கு மூன்று ரூபாய்கள் அறவிடப்படுகிறது. நாடு முழுவதும் மின்சாரம் பெறுவோரின் தொகை முப்பது லட்சத்துக்கும் அதிகமாகவே உள்ளது என மின்சாரசபை தெரிவித்துள்ளது. (ம-8)

## BEACON STUDY CENTRE

மணிக்கூட்டு வீதி, யாழ்.

A/L கலை, வர்த்தகப் பிரிவு 2006

ஆரம்பம்: 01-01-2004 மு.ப 9.00 மணி

| கலைப் பிரிவு | வர்த்தகப் பிரிவு |
|---|---|
| Tam. திரு.நாகதமிழிந்திரன் | Acc. திரு.பாலவாசன் |
| Log. திரு. S. மனோகரன் | Eco. திரு.மோகன் |
| Geo. திரு. S.R. பாலா | B.st. திரு.யசோ |
| Dra. திரு. R. சுதன் | H.C. திரு.ஶ்ரீஸ் |

(26541) (26-21-19-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்

திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு துணைவியார்

### திருமதி பா.லோகநாயகி

அவர்கள் 29-12-2003 இல் காலமான செய்திகேட்டு நாம் மிகுந்த கவலைப்படுகின்றோம். இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மாசாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி,
காங்கேசன்துறைக் கிளை,
மல்லாகம். (26544)(34)

முகாமையாளரும்,
ஊழியர்களும்.

## 90 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி, சபிண்டிகரண அழைப்பும் 31-12-2003

மலர்வு 20 - 06 - 1962



உதிர்வு 03 - 10 - 2003

### அமரர் முருகையா இராசகுமார்

(யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஊழியர்)

03-10-2003 வெள்ளிக்கிழமை யா/மடத்தடிச் சந்தியில் இராணுவ வாகனம், மோட்டார் வாகனத்தில் மோதிய விபத்தில் அகால மரணமடைந்த அன்னாரின் கண்ணீரில் நனைந்த நினைவுகள்.

(C/32422) (34-14-19-21)

## கண்ணீர் அஞ்சலி



எமது உதவிப் பொது முகாமையாளர்

திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவி

### திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
இலங்கை வங்கி,
பருத்தித்துறைக் கிளை.

(சி-32427)(21-19-11)

## சபிண்டிகரண அழைப்பு

01-12-2003 இல் காலமான எமது அன்புத் தந்தையார்

### தம்பு கந்தசாமி

அவர்களின் அந்தியேட்டி, சபிண்டீகரணம் என்பன 31.12.2003 புதன்கிழமை காலை 7.00 மணி முதல் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் வந்து கலந்துகொள்வதோடு நண்பகல் மதியபோசனத்திலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

*மகாத்மா வீதி,*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.* (26537)(26-21-14-19)

- அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

மலர்வு 25 - 05 - 1946



உதிர்வு 01 - 12 - 2003

### திருமதி கணேஸ் புஸ்பமலர்

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து நேரிலும், தபாலிலும், தொலைபேசியிலும் ஆறுதல் பகிர்ந்த அன்புள்ளங்களுக்கும் குடும்பத்துடன் இணைந்து உறுதுணையாக நின்று உதவிபுரிந்தோருக்கும் அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டு துயர்பகிர்ந்து கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினருக்கும், மானிப்பாய் மருதடி விநாயகர் சனசமூக நிலையத்தினருக்கும் பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தானத்தினருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (31.12.2003) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு றோட், மானிப்பாய். (C/32432)(34)

அன்புக் கணவர்,
மகன், மருமகள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 04 - 1926



மறைவு 16 - 12 - 1999

### திருமதி சிவசுந்தரம் வனசாட்சி

திதி: வளர்பிறை நவமி (மார்கழி) 31-12-2003

*எங்கள் அன்பின் குலவிளக்காய்*
*பாசத்தின் ஒளி விளக்காய்*
*எங்களை வழிநடத்திய பாசமிகு தாயே!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.*

(C/32123)(34-21-14-19)

வீ. எம். றோட்,
பருத்தித்துறை.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பண்டிகைக்கால அதிரடி SALE

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

10,11 POWER HOUSE RD, GRAND BAZAAR, JAFFNA

நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள, சல்வார்கமீஸ் வகைகள், கவுண் வகைகள், சோக்கோ ரவுசர், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள், சேட், Tசேட், கோட் சூட், பட்டுச்சேலைகள் என் பனவற்றின் அதிநவீன புதிய டிசைன்களை உடனுக்குடன பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

குறிப்பு: ரூபா 3000/=இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஆண், பெண் இருபாலாருக்கும் பொருத்தமான அழகிய Tசேட்ஸ் அன்பளிப்பாக வழங்கப்படும். இச்சலுகை 20.12.2003 – 31.12.2003வரை மட்டுமே!

(C/32106)(27)

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

இல.10,11, மின்சார நிலைய வீதி, (மலையன்கபே முன்பாக) பெரியகடை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## சமய சமரசத்துக்கு உரிய சந்தர்ப்பம்!

நாட்டில் மதப்பூசல்கள் மற்றும் அதனடிப்படையிலான வன்முறைகள் போன்றவை வெடிக்கக்கூடிய பதற்றநிலை காணப்படுவதாகச் சில தினங்களுக்கு முன் இப்பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

அது சில இடங்களில் தற்போது வெளியிடப்பட்டிருக்கின்றது.

தலைநகர் கொழும்பை ஒட்டிய பிரதேசங்களில் ஜெகோவாவின் சாட்சிகள் சபையினதும் பெந்தகோஸ்த சபையினதும் இரு வழிபாட்டு இடங்கள் இனந்தெரியாத கும்பல்களினால் தாக்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் தாக்குதல் சம்பவங்களைக் கடுமையாகக் கண்டித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இச்சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்தவும், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் பணித்திருக்கின்றார்.

இதேசமயம், கொழும்பில் புத்தசாசன அமைச்சுக்கு முன்னால் ஜாதிக சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த சுமார் நூறு பிக்குமார் சாகும் வரையான உண்ணாவிரதப்போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார்கள். பௌத்தர்களும், இந்துக்களும் தவறான - முறையற்ற - விதத்தில் மதமாற்றம் செய்யப்படுகின்றமையைத் தடுக்கும் விதத்தில் உடனடியாகச் சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்று வற்புறுத்தியே இந்தப் போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இதேபோன்ற சட்டம் ஒன்றைக்கொண்டு வருவதில இந்துகலாசார அமைச்சரான தி.மகேஸ்வரனும் அதிக சிரத்தையுடையவராக இருந்து வருகின்றார். இது குறித்து கடந்தவாரமும் அவர் அறிவிப்பு ஒன்றை விடுத்தார். பிறக்கும் புத்தாண்டில் அத்தகைய சட்டம் ஒன்று கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

ஆக, முறையற்ற மதமாற்ற பிரசாரங்கள் மற்றும் மதமாற்ற முயற்சிகளைக் கட்டுப்படுத்தும் விதத்திலான சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்ற அழுத்தம் - கோரிக்கை - இந்துக்கள் மற்றும் பௌத்தர்கள் மத்தியிலிருந்துதான் எழத் தொடங்கியிருக்கின்றது. நீண்டகாலம் சமூகத்தின் மத்தியில் அரசல்புரசலாகக் கீறல்களை உருவாக்கிக் கொண்டிருந்த இப்பிரச்சினை இப்போது கொதித்து வெளிப்படத் தொடங்கியிருக்கின்றது.

மதச்சுதந்திரம் வேறு. மதமாற்றத்துக்கான பிரசார சுதந்திரம் வேறு. இவ்வற்றுக்கிடையில் வரையறை - வேறுபாடுகளை வகுத்துக்கொள்வது மிகவும் நுணுக்கமான விவகாரம். எனவே, இது விடயத்தில் எழுந்தமானத்தில் - அவசர கோலத்தில் - சட்டங்களைக் கொண்டுவரக்கூடாது; கொண்டு வந்துவிடவும்முடியாது.

அதற்கு முதல் இவ்விடயம் குறித்து தேசிய ரீதியில் விவாதங்கள், கருத்துப்பரிமாறல்கள், ஆலோசனைகள், கூட்டங்கள் ஆகியவை நடத்தப்பட்டு, வெள்ளை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மக்கள் முன்னும் மக்களின் பிரதிநிதிகள் முன்னும் மற்றும் மதத் தலைவர்கள் , சமூக அறிஞர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் முன்னும் அவை சமர்ப்பிக்கப்படவேண்டும். அதன்பின்னரே சட்டவாக்கல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழகத்தில் பலத்த சர்ச்சைகளுக்கு மத்தியில் இத்தகையதோர் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதனையும் ஆலோசனைக்கான முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

எது, எப்படியோ இது மக்களின் உணர்வுகளை - உணர்ச்சிகளை - இலகுவாகத் தூண்டிவிடக்கூடிய ஒருவிவகாரம். ஆகவே, இதனைக் கையாள்வதில் அதீத பொறுமையும், நிதானமும், பொறுப்புணர்வும், தீர்க்கதரிசனமும் அவசியம்.

அதேசமயம், மற்றொரு விடயமும் சுட்டிக்காட்டப்படவேண்டியது கட்டாயமாகின்றது.

மத விடயங்களுக்காக மதம் பிடித்து வன்முறையில் இறங்குவது அடிப்படை மதக்கோட்பாடுகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் முற்றிலும் முரணானது. மதத்தைப் பேணிப்பாதுகாக்க முனைகின்றோம் என்று கூறிக்கொண்டு மதக்கோட்பாடுகளையே குழிதோண்டிப் புதைக்கும் விதத்தில் நடந்துகொள்வது குளித்து சுத்தமாகின்றோம் என்று கூறிக்கொண்டு நமக்குநாமே சேறு அள்ளிப் பூசிக்கொள்வதற்கு ஒப்பானதாகும்.

இரண்டு தசாப்த கால இனப்போரினால் சீரழிந்து போயிருக்கும் நமது நாடு மற்றொரு மதக்கலவரத்தையோ, சமயப்பூசல்கள், மோதல்களையோ தாங்காது என்பதை இப்பத்தியில் ஏற்கனவே வலியுறுத்தியிருந்தோம்.

மதவழிகாட்டிகள், சமூகப்பெரியவர்கள், அரசியல் தலைவர்கள், பொதுஅமைப்புக்களின் பிரமுகர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் தலையிட்டு நாட்டில் மத இணக்கத்தையும், சமய சகிப்புத் தன்மையையும், சமரசப் போக்கையும் நிலைநாட்டி, தொடர்ந்து மத அமைதி பேணுவதற்கு ஆக்கபூர்வமான வழியில் தங்கள் பங்களிப்பைச் செய்வதற்குரிய காலம் வந்திருக்கின்றது என்பதை அவர்களுக்கு நினைவூட்ட விழைகிறோம்.

# போரும் சமாதானமும் சந்திக்கும் சந்தியில் நிற்கிறோம் பாதை எது என்பதை ஆட்சியாளரே தீர்மானிக்கவேண்டும்

### மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழினி உரை

வலி.வடக்கு,டிசெ.31

போரும் சமாதானமும் சந்திக்கும் பாதையின் சந்தியில் இன்று நாம் நின்றுகொண்டு இருக்கின்றோம். எங்களை எந்தப் பாதையால் அழைத்துச் செல்வது என்பதை ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களே தீர்மானிக்க வேண்டும்.

- தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினி இவ்வாறு குறிப்பிட்டார்.

கோப்பாய் பிரதேச சிகை அலங்கரிப்பாளர்களுக்கான எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு சங்கத் தலைவர் த.சிவகுமார் தலைமையில் அச்சுவேலியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே செல்வி தமிழினி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு நோக்கிச் சென்று தொழில்புரிந்துகொண்டு இருந்தவர்களைப் பார்த்து அனறைய ஜனாதிபதி 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' என்று கூறினார்.

அன்று தமிழன் போரை விரும்பவில்லை; அத்தகைய அப்பாவித் தமிழர்களிடம்தான் ஜே.ஆரினால் சவால் விடப்பட்டது. இன்று நிலைமை அப்படியில்லை. புலிகளைப் பொறுத்த வரையில் பல்வேறு படிகளையும் கடந்து வளர்ச்சி அடைந்துள்ளார்கள்.

முன்னர் சிங்களப் பேரினவாதிகளால் தமிழர்கள் அடிபட்டபோதும், சுடப்பட்டபோதும் கையெடுத்துக் கும்பிடவும் சுட வேண்டாம் என்று அவர்களிடம் கெஞ்சவும் மட்டுமே முடிந்தது. ஆனால், இன்று தமிழனுக்கு என்று ஒரு படையே உண்டு. ஒரு தமிழன் தாக்கப்படுவானாக இருந்தால்கூட தட்டிக்கேட்கும் வல்லமை இன்று எமக்கு உண்டு.

பேச்சுக்களை புலிகள்தான் குழப்பிவருகின்றார்கள் என்று அரசும் சர்வதேச நாடுகளும் முன்னரெல்லாம் கூறிவந்தன. ஆனால், இன்று சமாதானப் பேச்சில் ஈடுபடவும் கைகொடுக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம்; அரசு தயாரில்லை.

வவுனியாவைக் கடந்து தென்பகுதிக்குச் செல்வதாக இருந்தால் ஆண்கள் சந்தனப்பொட்டையும், பெண்கள் குங்குமப் பொட்டையும் அழித்துவிட்டுத் தம்மைத் தமிழர் என்று இனங்காட்டாது சென்ற காலம் ஒன்றுண்டு. இன்று அந்த நிலைமை முற்றுமுழுதாக மாற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது இரண்டு அரசியல் தலைநகரங்கள் காணப்படுகின்றன. கொழும்பில் ஸ்ரீலங்காவின் அரசியல் தலைமைப்பீடமும் கிளிநொச்சியில் தமிழ்மக்களின் தலைமைப் பீடமும் இயங்குகின்றன.

கொழும்பு வருகின்ற சர்வதேசத் தலைவர்கள் இன்று கிளிநொச்சியில் உள்ள தமிழர்களின் அரசியல் தலைமையகத்திற்கும் வந்து பிரச்சினைகளைக் கேட்டறிந்து கதைத்துவிட்டே செல்கின்றார்கள்.

தமிழர்களையே தெரியாத கொழும்புவாழ் தமிழ் தலைவர்களைச் சந்தித்துவிட்டுச் செல்வதே முன்னர் இருந்த நிலைமை. அதனால் எந்தவகையான பிரயோசனமும் இல்லையென்பதை உணர்ந்து, தற்போது கிளிநொச்சிக்கு வந்து தமிழர் தலைமையுடன் பேசிவிட்டுச் செல்கின்ற நிலைமை இன்று காணப்படுகின்றது.

நாம் அரசுடன் பேச்சில் ஈடுபடத் தயார்; சமாதானம் பேசவும் தயார் என்று கூறுகின்றோம். அதற்காகக் காத்துக்கொண்டு இருக்கின்றோம். ஆனால், தென்னிலங்கையின் தலைமைகள் பேச்சுக்குத் தயார் இல்லாத நிலையில் குழம்பிப்போய் உள்ளன. சமாதானம் விரும்பிகள் என்று கூறிக்கொண்டு முழு உலகையும் ஏமாற்றியவர்கள் இன்று சமாதானப் பேச்சுக்கு வரமுடியாமல் திண்டாடுகின்றார்கள்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடந்த சமாதானப் பேச்சுக்கள் இன்று ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்களாக மாற்றம் பெற்றுள்ளன.

எமது போராட்டத்தைப் பொறுத்தவரையில் எந்த அந்நிய சக்தியும் எமக்கு உதவி செய்யவில்லை. எமது மக்களே எமது போராட்டத்திற்கான சகல வளங்களையும் வழங்கினார்கள். ஆகையினால், நாம் யாருக்கும் பதில் கூறவேண்டியவர்கள் அல்லர். எமது மக்களுக்கே நாம் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள் - என்று தெரிவித்தார்.

தமிழீழ கல்விப் பேரவையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கவியன்பன், வலிகாமம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன், கிராம அலுவலர் யோகராசா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(ம-86)

# முதலாம் தர மாணவரின் அனுமதி; ஜனவரி 16 இல் கால்கோள் விழா

## சகல பாடசாலைகளிலும் வலய மட்டத்திலும்

வலி.தெற்கு,டிசெ.31

2004 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை ஜனவரி மாதம் 05 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

முதலாம் தரத்துக்கான சகல மாணவர்களையும் பாடசாலைக்கு அழைத்து ஜனவரி மாதம் 16 ஆம் திகதி வைபவமாக நடத்த ஒழுங்குகள் செய்து முறையாக வகுப்புகளை ஆரம்பிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சின் கல்வி பண்புசார் அபிவிருத்தி மேலதிக செயலாளர் இந்திராணி டி காரியவாசம் சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்களூடாக பாடசாலை அதிபர்களுக்கு இவ்வாறு அறிவித்துள்ளார்.

முதலாம் தர மாணவர்களுக்கான இக்கால்கோள் விழா ஆரம்பப் பிரிவுகள் உள்ள சகல பாடசாலைகளிலும் நடத்தப்படும். அத்துடன், வலய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் இவ்வைபவம் நடத்தப்படவேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

கால்கோள்விழா நிகழ்ச்சிகளாக புதிய மாணவர்களை வரவேற்றல், பிரதம விருந்தினரை வரவேற்றல், தேசிய பாடசாலை கொடிகள் ஏற்றல், சமய வழிபாடுகள் நிகழ்த்தல் போன்றவற்றை மேற்கொள்ளலாம் என மேலதிக செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ்வைபவத்தின்போது பின்வரும் செயற்பாடுகளையும் இணைத்துக்கொள்வது அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மாணவர்களை வரவேற்பதற்காகத் தரம் இரண்டு மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளை நடத்துதல்.

ஆரம்பக்கல்வி சீர்திருத்தம் பற்றி முதலாம் தர மாணவர்களின் பெற்றோர்களுக்கு விளக்கமளித்தல்.

முதலாம் தரத்தில் புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்துவதன் குறிக்கோள்கள் பற்றி அவர்களுக்கு விளக்குதல்.

பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள 'வாழ்க்கையில் ஓர் உறுதியான ஆரம்பம்' என்ற கையேட்டு புத்தகத்தை பெற்றோருக்கு வாசிக்கக் கொடுத்தல்.

மாணவர்களின் மதத்தைச் சேர்ந்த மதத்தலைவர்களை அழைத்தல்.

16.01.2004 இல் பாடசாலை மட்டத்தில் இவற்றைச் செயற்படுத்திய பின் அறிக்கை தயாரித்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்புதல் வேண்டும். (ஜ-152)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தங்கள் வேண்டும் என்கின்றார் பேரியல் அஷ்ரப்

கொழும்பு,டிசெ.31

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அது தொடர்பாக ஜனாதிபதியிடம் கலந்துரையாடியுள்ளோம். அவர் விரைவில் இது தொடர்பான சாதகமான பதிலைத் தருவார் என எதிர்பார்க்கின்றோம். இது தொடர்பாக புலிகளுடனும் தமிழ்த் தலைவர்களுடனும் கலந்துரையாட ஆவலாக உள்ளோம்.

- இவ்வாறு தேசிய ஜக்கிய முன்னணித் தலைவியும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

போர் நிறுத்த ஒப்பந்தம் வேறு, புரிந்துணர்வு ஒப்பந்தம் வேறு. புரிந்துணர்வு ஒப்பந்தம் எனும்போது, அதில் முஸ்லிம்கள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் தொடர்பாகக் குறிப்பிடப்படவில்லை.

எனவே, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். இதற்காக புலிகளுடனும் கலந்துரையாட ஆவலாகவுள்ளோம்.

முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் அஷ்ரப் வகுத்த கொள்கைகளின் வழியில் முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்து செல்லுமானால் முஸ்லிம் காங்கிரஸுடன் புரிந்துணர்வுடன் கூடிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைந்து செயற்பட எமது கட்சி தயாராகவுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபடாமல் இருப்பதற்காகவேதான் அன்று இணைத் தலைமைத்துவத்தை விட்டுக்கொடுத்தேன். ஆனால், இன்னமும் அக்கட்சியில் ஒற்றுமை ஏற்படவில்லை.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

**நாளை**

மார்கழி 17

வியாழக்கிழமை

(01.01.2004)

திதி : நவமி

மு.ப. 10.16 வரை

நட்சத்திரம்: அச்சுவினி

பின்னிரவு 4.20 வரை.

சுபநேரம்: 7.59 - 9.29

[illegible]

[illegible]

**உதயவாக்கு**

மானமும் உயிரும் போனால் வராதது. புகழும் பழியும் வந்தால் போகாதது.

# ஈழத்துச்சிதம்பர திருவாதிரை உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள்

காரைநகர்,டிசெ.31

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை உற்சவம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் பக்திபூர்வமாக ஆரம்பமாகியது. இந்த உற்சவம் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக நடைபெறும்.

இந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள காரைநகர் மற்றும் வெளியூர் மக்கள் பெருமளவில் காரைநகருக்கு வருகைதந்துள்ளனர்.

இந்த உற்சவத்தையொட்டி காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை, ஈழத்துச் சிதம்பர சைவஅறப்பணி நிலையம் என்பவற்றில் தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. நேற்றுமுன்தினம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இந்த அன்னதான நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் ஆருத்திரா அபிஷேகம் அன்று பின்னிரவும் நடைபெறவுள்ளன. (ம-73)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மமதை வேண்டாம்!

"அண்மையில் ஸ்ரீலங்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் அணியை 1:0 என்ற ரீதியில் தோற்கடித்து ஸ்ரீலங்கா கிரிக்கெட் அணி டெஸ்ட் போட்டித் தொடரில் வெற்றியீட்டியது வாசகர்கள் அறிந்த விடயமே.

அந்த 'டெஸ்ட்' போட்டித் தொடரில் இங்கிலாந்து அணியின் பின்வரிசைத் துடுப்பாட்டக்காரர்கள் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்த ஓட்டங்கள் குறித்துப் பெரிதாகக் கணக்



கெடுக்கப்படவேண்டியதில்லை. அந்த நால்வரும் ஆடுகளத்தில் நிலைகொண்டிருந்த காலமே கணக்கில் கொள்ளப்படவேண்டும். அவர்கள் முதலாவது 'டெஸ்ட்' போட்டியில் 231 நிமிடங்களும் இரண்டாவது 'டெஸ்ட்' போட்டியில் 268 நிமிடங்களும் ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாடியுள்ளனர். உண்மையில் இவ்விரு 'டெஸ்ட்' போட்டிகளிலும் இங்கிலாந்து அணி தோல்வியைத் தழுவுவதினின்றும் அதனை மீட்டெடுத்தவர்கள் இப்பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களே.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இவ் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா சுற்றுப்பயணத்தின் முடிவு அவர்களுக்குத் தோல்விகரமானதொன்றாக அமைந்துவிட்டது. மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் இடம்பெற்ற ஒரேயொரு போட்டியில் இங்கிலாந்து அணி ஸ்ரீலங்கா அணியிடம் பத்து விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவிக்கொண்டது. இத்தொடரில் மூன்று போட்டிகள் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், மழைகாரணமாக மற்றைய இருபோட்டிகளும் கைவிடப்பட்டன. அதேசமயம், 22 வருட டெஸ்ட் வரலாற்றிலே ஸ்ரீலங்காவுக்குக் கிடைத்த மிகப்பெரும் வெற்றியாக கொழும்பில் இடம்பெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டி அமைந்தது. இதற்கு முன்னர் இடம்பெற்ற முதலாவது மற்றும் இரண்டாவது 'டெஸ்ட்' போட்டிகள் எத்தரப்புக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தமை வாசகர்கள் அறிந்ததொன்றே.

'மைக்கல்வோகன்' தலைமையில் தம்புள்ளை மைதானத்தில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அணிக்கெதிராக இங்கிலாந்து அணி கலந்துகொண்ட சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் போட்டியில் பத்து விக்கெட்டுக்களால் இங்கிலாந்து அணி தோல்வியுற்றமை கடந்த 32 ஆண்டுகளாக சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றிவரும் இங்கிலாந்து அணி சந்திக்க நேர்ந்த மூன்று மிகப்பெரிய தோல்விகளில் ஒன்றாக அமைந்துவிட்டது.

இங்கிலாந்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற ஆரம்பித்த நாள் முதல் (1877) கடந்த 126 ஆண்டுகளில் சந்தித்த படுதோல்விகளில் இது மூன்றாவதாக அமைந்துள்ளது.

கிரிக்கெட் ஆட்டத்தை ஸ்ரீலங்காவுக்கு அறிமுகம் செய்துவைத்த நாடான இங்கிலாந்துக்கு எதிராக ஸ்ரீலங்கா இவ்விதம் தனது திறமையை வெளிப்படுத்தி தனது சொந்த மண்ணிலேயே இங்கிலாந்து அணியைப் படுதோல்வி அடைய வைத்தமையையிட்டு உண்மையில் நாம் பெருமைப்பட்டுக்கொள்ள முடியும். ஆனால், அப்பெருமையால் தலைக்கனம் கொண்டு யதார்த்தத்தை மறந்துவிடுவது ஸ்ரீலங்காவின் கிரிக்கெட் ஆட்டத்தின் எதிர்காலத்தை நாசப்படுத்தும் நடவடிக்கையாக அமையும். எனவே, நாம் பெற்ற வெற்றி காரணமாக மமதை கொள்ளாது யதார்த்தத்தை உணர்ந்து தவறுகளைத் திருத்தி நம்திறமையை வளர்த்துக்கொள்ள முயல்வது சிறப்பாய் அமையும்.

இங்கிலாந்துடனான அண்மைய 'டெஸ்ட்' போட்டித் தொடரில் 1:0 என்ற அடிப்படையில் மட்டுமே ஸ்ரீலங்காவால் வெற்றியடைய முடிந்தபோதிலும் இத்தொடரில் இடம்பெற்ற சகல 'டெஸ்ட்' போட்டிகளிலும் வெற்றியடையக்கூடிய வாய்ப்பு ஸ்ரீலங்காவுக்குக் கிட்டியிருந்ததென்பது பலரது பொதுவான அபிப்பிராயமாகும். ஆனாலும், டறல் ஹெயார் (ஆஸ்திரேலியா) மற்றும் சீ.வெங்கட்ராகவன் (இந்தியா) ஆகிய நடுவர்களின் நியாயமற்ற தீர்ப்புக்களும் கொஞ்சம்கூட இரக்கம் காட்டாது பெய்தமழை காரணமாகவும் ஸ்ரீலங்கா அணியின் வெற்றிவாய்ப்புக் கைநழுவி முதலிரு போட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. குறிப்பாக, முதலாவது டெஸ்ட் போட்டி முடிவின்போது மயிரிழையில் வெற்றி வாய்ப்பை ஸ்ரீலங்கா அணியினர் தவறவிட்டமைக்கான பொறுப்பை ஸ்ரீலங்கா அணிமீது சுமத்துவது நியாயமானதல்ல.

அவ்வாறான போதிலும் இப்போட்டித் தொடர் முழுவதிலும் போட்டியில் வெற்றிபெறுவதற்காக ஸ்ரீ லங்கா அணியினர் எடுத்துக்கொண்ட கடும் முயற்சியின் பிரதிபலனாக போட்டித் தொடரை 3:0 என்ற ரீதியில் வென்றெடுப்பதற்கான சந்தர்ப்பம் நிறையவே வாய்ந்திருந்தபோதிலும் அது செயலளவில் கைகூடவில்லை. இதன்மூலம், நடந்துமுடிந்த போட்டிகளில் கைக்கொள்ளப்பட்ட அணுகுமுறைகள் குறித்து விமர்சிப்பதில் காலம் கடத்தாது எதிர்வரவிருக்கும் ஆஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளது ஸ்ரீலங்காவுக்கான சுற்றுப் பயணத்தின் போது இடம்பெறவுள்ள போட்டிகளில் இவ்வித தவறுகள் ஏற்பட இடமளிக்காது பார்த்துக் கொள்ளவேண்டும்.

### புதிய வீரர்களுக்கு சந்தர்ப்பம் வேண்டும்

இவ்விரு அணிகளின் ஸ்ரீலங்கா சுற்றுப் பயணத்தின்போது இடம்பெறும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஸ்ரீலங்காவில் வளர்ந்துவரும் புதிய இளம் வீரர்களுக்கு போட்டிகளில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்படல் அவசியமாகும்.

தம்புள்ள மைதானத்தில் மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி கடந்த நவம்பர் 18 ஆம் திகதி இடம்பெற்றது. அதற்கு முதல் நாள் மாலைவரை அப்போட்டியில் விளையாடும் வீரர்களில் ஒருவரான வேகப் பந்து வீச்சாளர் சமிந்த வாஸுக்கு உதவியாக நுவான் சொய்சா இணைத்துக் கொள்ளப்படுவார் என்பதே பல கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், போட்டி ஆரம்பமான நவம்பர் 18 ஆம் திகதி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த "ஸ்கோர் போட்டில்" அன்று ஸ்ரீலங்கா அணி சார்பாக போட்டியில் விளையாடும் வீரர்களது பட்டியலில் நுவான் குலசேகர மற்றும் திலுஷ பெர்னாண்டோ ஆகியோரது பெயர்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

இது ஸ்ரீலங்கா கிரிக்கெட் தெரிவுக்குழு அதிகாரிகள் மேற்கொண்ட துணிச்சல் மிக்கதொரு நடவடிக்கையாகும். இங்கிலாந்து அணியின் முன்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் ஆட்டம் இழக்கச் செய்ததன் மூலம் திலுஷ பெர்னாண்டோவும் நுவான் குலசேகரவும் தாம் இப்போட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட்டமைக்கான எதிர்பார்ப்பை தமது திறமை மூலம் வெளிப்படுத்தி நிரூபித்துக் காட்டினர் என்பதை ஒப்புக்கொள்ள முடிந்தது.

காலியில் இடம்பெற்ற இவ்விரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது 'டெஸ்ட்' போட்டியில் ஸ்ரீலங்கா அணியில் திலுஷ பெர்னாண்டோ ஒரு பந்து வீச்சாளர் என்ற ரீதியிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். ஆனால், அப்போட்டியில் 7 ஓவர்கள் மட்டுமே அவருக்குப் பந்துவீச சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது 'டெஸ்ட்' போட்டியிலும் 14 ஓவர்கள் மட்டுமே அவருக்குப் பந்துவீசச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இவ்விரு போட்டிகளிலும் திலுஷ பெர்னாண்டோவின் பந்துவீச்சின் தன்மை குறித்து திருப்தியடைய முடியாது. சுழல்பந்து வீச்சுக்குச் சாதகமானதெனக் கருதப்பட்ட அம்மைதானத்தில் வேகப் பந்துவீச்சாளர் ஒருவரால் சிறப்பாகப் பந்துவீச முடியுமென எதிர்பார்ப்பது நியாயமானதல்ல எனக் கருதப்பட்டபோதிலும், ஸ்ரீலங்கா அணி போட்டியின்போது சிரமத்தைச் சந்திக்க நேரும்வேளைகளில் சிறப்பான வேகப்பந்து வீச்சாளரின் தேவை அவசியமாகிறது.

அவ்வாறான வேளையில் தமக்குக் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி தனது திறமையை வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பு அவ்வேகப் பந்து வீச்சாளர் மீது சுமத்தப்படுகிறது என்பது மட்டுமன்றி, அவ்வாறான திறமைகொண்ட வீரரை இனம்கண்டு பிடித்து அணியில் இணைத்துக்கொள்ள அணியின் தலைவரும் முயற்சித்தல் அவசியமாகிறது.

**- வீயெஸ்ரீ -**

இப்போட்டித் தொடரில் இங்கில்ாந்து அணி தான் விளையாடிய மொத்தம் ஆறு இன்னிங்சுகளிலும் மொத்தமாக 56 விக்கெட்டுக்களை இழந்தது. அவற்றில் 26 விக்கெட்டுக்கள் முரளிதரனாலும், 13 விக்கெட்டுக்கள் சமிந்த வாஸினாலும் வீழ்த்தப்பட்டன. இவற்றுக்கு மேலாக ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்ட தில்ஹாரா பெர்னாண்டோவால் நான்கு விக்கெற்றுக்கள் வீழ்த்தப்பட்டன.

இதன்படி, இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் 76.78 வீதமான விக்கெற்றுக்களை வீழ்த்திய பெருமையை ஸ்ரீலங்கா கிரிக்கெட் குழுவில் அங்கம் வகித்த மூன்று பந்துவீச்சாளர்களே பெற்றுக்கொண்டனர். இவ்விதம் பந்து வீச்சுத் திறமைகொண்ட இரண்டு, மூன்று வீரர்களை வைத்துக்கொண்டு ஸ்ரீலங்கா அணி டெஸ்ட் போட்டியை வெல்லமுடியுமா? என்பது ஸ்ரீ லங்கா கிரிக்கெட் அணியால் ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

இச்சகல 'டெஸ்ட்' போட்டிகளிலும் இங்கிலாந்து அணியின் பின்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் ஸ்ரீலங்கா அணியின் பந்து வீச்சாளர்களுக்கு நிறையத் தலைவலியை ஏற்படுத்தியதாகக் கருதமுடியும். இத்தொடரில் இங்கிலாந்து அணியால் பெறப்பட்ட மொத்த ஓட்ட எண்ணிக்கையான 1,332 ஓட்டங்களில் ஐந்தில் ஒரு பங்கு அதாவது, 265 ஓட்டங்கள் இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர்களான நான்கு பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களாலேயே பெறப்பட்டதை அவதானிக்கமுடியும். ஆனால், இதில் முக்கியமான விடயம் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்துவதல்ல. அவ்விதம் அப்பின்வரிசைத் துடுப்பாட்டக்காரர்கள் தமது துடுப்பாட்டத்தின் போது களத்தில் எவ்வளவு நேரத்தைச் செலவு செய்தனர் என்பதாகும்.

இவ்விதம் இங்கிலாந்து அணியின் பின்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் முதலாவது மற்றும் இரண்டாவது டெஸ்ட் போட்டிகளின்போது முறையே 231 மற்றும் 268 நிமிடங்கள் துடுப்பாட்டக் களத்தில் நின்றுள்ளனர்.

### இங்கிலாந்தை காத்தவர்கள்

இங்கிலாந்து அணியின் இந்நான்கு பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்யும் முயற்சியில் ஸ்ரீலங்கா அணியின் பந்துவீச்சாளர்கள் கடும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இவர்கள் விக்கெற்றைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அவதானமாகப் பந்துகளை எதிர்கொள்ளும் துடுப்பாட்ட வீரர்களை வெளியேற்ற ஸ்ரீலங்கா அணியின் பந்துவீச்சாளர்கள் சிரமப்பட்டது மேலே குறிப்பிட்டதொரு சந்தர்ப்பத்தில் மட்டுமல்ல, முன்னர் இடம்பெற்ற இவ்வாறான சில போட்டிகளிலும் ஸ்ரீலங்கா அணி இவ்வித சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

சிறந்த விக்கெட் காப்பாளர்கள் இருந்தபோதிலும் குமார் சங்ககார விக்கெட் காப்பாளராக நியமிக்கப்பட்டார். அவ்வாறான நிலையிலும், மொத்தமாக இம்மூன்று டெஸ்ட் பந்தயங்களிலும் 47 மேலதிக உதிரி ஓட்டங்களை மட்டுமே சங்ககாரா விட்டுக் கொடுத்தார். அவரின் விக்கெட் காப்பு சிறப்பாக அமைந்தது.

பொதுவாக, டெஸ்ட் போட்டியொன்றின் போது விக்கெட் காப்பாளர் 20 ஓட்டங்கள் வரையில் விட்டுக்கொடுப்பதை ஸ்ரீலங்கா போன்ற மிதமான பந்து வீச்சாளர்களை உள்ளடக்கிய அணியொன்றினால் மட்டுப்படுத்திக் கொள்ள இயலாததொன்றாகும். மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விக்கெட் காப்பாளராகத் தொடர்ந்து ஆறரை மணிநேரம் விளையாடிய குமார் சங்ககார, மாவன் அத்தப்பத்து காயமடைந்ததின் காரணமாக ஸ்ரீலங்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரராகக் களமிறங்க வேண்டி நேரிட்டது. இதன்பலனாக 59 நிமிடநேரம் களத்தில் துடுப்பெடுத்தாடி ஆறு பவுண்டரிகள் உட்பட 31 ஓட்டங்கள் பெற்றநிலையில் - 'சிலிப்' நிலையில் - களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த மாக்ரெஸ்க் கோதிக்கிடம் பிடிகொடுத்து அவர் ஆட்டமிழக்க நேர்ந்தது.

ஆனால், இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டம் முடிவடைந்ததும், குமார சங்ககாராவுக்கு குறிப்பிடத்தக்க அளவு நேரம் ஓய்வுவெடுக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தால், இவ் இடதுகை துடுப்பாட்டவீரர் ஸ்ரீலங்கா அணிக்காக மேலும் சில ஓட்டங்கள் பெற்றுக் கொடுக்கச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கும்.

டெஸ்ட் போட்டியொன்றின்போது மூன்றாவதாகக் களமிறங்கும் துடுப்பாட்டக்காரரின் பணி மிகமுக்கியம் வாய்ந்ததாகும். குறிப்பிட்ட அணியைச் சேர்ந்த துடுப்பாட்டத்தில் திறமையை வெளிப்படுத்தும் வீரரொருவரே மூன்றாது துடுப்பாட்டவீரராகக் களமிறங்கப்படுவது வழக்கம். அத்தகைய துடுப்பாட்ட வீரர் தமது அணிதொடர்ந்து விக்கெட் இழப்பைச் சந்திக்காது தடுக்கும் வகையில் அவதானத்துடன் விளையாடவேண்டிய பொறுப்பு சுமத்தப்பட வேண்டியவரா? என்பது குறிதது தற்பேதைய ஸ்ரீலங்கா கிரிக்கெட் தேர்வுக்குழு மீண்டும் ஒருதடவை பரிசீலனை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

ஸ்ரீலங்கா அணி 136 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி அவற்றுள் 33போட்டிகளில் வெற்றியடைந்துள்ளது. இவற்றுள் அண்மையில் இங்கிலாந்து அணிக்கு எதிராக ஸ்ரீலங்கா அணி பெற்ற வெற்றியே இதுவரை அந்த அணிபெற்ற பெருவெற்றியாகும் (இன்னிங்ஸ் மற்றும் 215 ஓட்டங்கள்) இதற்கு முன்னர் ஸ்ரீலங்கா அணி பங்களாதேஷ் அணியை ஒரு இன்னிங்ஸ மற்றும் 196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றிருந்தது.

இதுவரை ஸ்ரீலங்கா அணிக்கெதிராக இங்கிலாந்து அணி ஆகக்குறைந்த ஓட்டமாக 181 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆனால், இந்தத் தொடரின் இறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணி ஆகக்குறைந்த ஓட்டமாக 148 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஒரு இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களுக்கு 952 ஓட்டங்களை ஸ்ரீலங்கா அணி இந்திய அணிக்கு எதிராய் (1997/98) பெற்றது. இது ஸ்ரீலங்கா அணி பெற்ற ஆகக்கூடிய ஓட்டங்கள் மாத்திரமின்றி டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு சாதனையுமாகும். ஆனால், அண்மையில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியில் ஸ்ரீலங்கா அணி பெற்ற ஓட்டங்கள் (628/8) அந்த அணி டெஸ்ட் வரலாற்றில் பெற்ற இரண்டாவது பெரிய எண்ணிக்கையாகும்.

1998 இல் எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஸ்ரீலங்கா அணி இங்கிலாந்திற்கு எதிராக 591 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இது அந்த மைதானத்தில் ஸ்ரீலங்கா அணிபெற்ற அதிக ஓட்டங்களாகவும் இதுவரை இங்கிலாந்துக்கு எதிராகப்பெற்ற அதிக ஓட்டங்களாகவும் இருந்துள்ளது. 3ஆவது டெஸ்ட் போட்டியில் பெற்ற ஓட்டங்கள் (628/8) மூலம் இந்த இரு சாதனைகளும் முறியடிக்கப்பட்டுள்ளன.



எஸ்.எஸ்.சி• மைதானத்தில் நடைபெற்ற 16 டெஸ்ட் போட்டிகளில் முத்தையா முரளிதரன் விளையாடியுள்ளார். இந்தமைதானத்தில் மாத்திரம் 100 விக்கெட்டுக்களை விழ்த்தியுள்ளார் எஸ்.எஸ்.சி மைதானத்தைப் பெறுத்தவரை தனியொருவர் பெற்ற விக்கெட்டுக்களில் இதுவும் ஒரு சாதனையாகும்.

### முரளிதரனுக்கு 2004 வசந்தகாலம்

இந்தப்போட்டித் தொடரில் 26 விக்கெட்டுக்களை முத்தையா முரளிதரன் பெற்றதன்மூலம் மொத்தமாக அவர் இதுவரை 485 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆகக்கூடிய விக்கெட்டுக்களை (519) மேற்கிந்திய அணி வீரர் வோல்ஸ் கைப்பற்றியுள்ளார். தற்போதைய சாதனை அதுவே. இதற்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலிய அணியைச் சேர்ந்த ஷேன் வோன் 491 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். ஷேன் வோன் மீது விதிக்கப்பட்ட தடைமுடிவடைந்து அடுத்த பெப்ரவரி மாதத்தில் அவர் மீண்டும் கிரிக்கெட் களத்தில் இறங்கவுள்ளார். இவருக்கு வயது 34.

முரளிதரனுக்கு தற்போது வயது 31. அவர் 2007ஆம் ஆண்டுவரை கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளார். அதாவது அவர் இன்னும் 4 வருடங்கள் விளையாடுவார்.

இது இவ்வாறு இருக்கையில், 2004 ஆம் ஆண்டில் மாத்திரம் ஸ்ரீலங்கா அணி 16 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. அதாவது, 2004இல் ஸ்ரீலங்கா அணி கைப்பற்ற 320 விக்கெட்டுக்கள் (10x2x16) காத்திருக்கின்றன. முரளிதரனின் உடல் நலமும் பந்துவீச்சுத் திறமையும் இதுபோன்று தொடருமானால் 2004ஆம் ஆண்டிலேயே முரளிதரன் அனைத்துச் சாதனைகளையும் முறியடித்து 600 விக்கெட்டுக்களைக் கடப்பார் என்பதில் சந்தேகமில்லை. நாம் நினைப்பது, விரும்புவது நடக்குமானால் கிரிக்கெட் விளையாட்டில் முரளிதரன் வரலாற்று நாயகனாகத் திகழ்வார். அந்த நாளை கிரிக்கெட் ரசிகர்கள் மிக விரைவில் எதிர்பார்ப்பார்கள் எனக் கூறின் அது மிகையாகாது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லிடப்பேசிகள் மூலமும் 'வைரஸ்'

கண்ணுக்குத் தெரியாத நோய்க்கிருமி (வைரஸ். பக்டீரியா போன்றவை) மனித உடலைத் தாக்கிப் பாதிப்பை உண்டாக்குகின்றன. அதேபோல கணனி களில் உள்ள தகவல்களை அழிக்கும் (அல்லது செயல் இழக்க வைக்கும்) வைரஸ் களும் உள்ளன.

கணனி வைரஸ் என்பது நோய்க்கிருமி அல்ல இது ஒரு வகையான 'மென்பொருள்' (சொவ்ட்வெயார்). மின் அஞ்சல் மற்றும் இணையத் தளம் மூலம் ஒரு கணனியில் இருநது மற்றொரு கணனிக்கு பரவி அதில் உள்ள தகவல்களை அழித்து விடும் திறன் கொண்டது.

கணனி மென்பொருள்களை உருவாக்கும் திறன் படைத்த சிலர் தங்களது அறிவுத்திறனை நாசவேலைக்குப் பயன்படுத்தி கணனி வைரஸ் மென்பொருள் களை உருவாக்குகின்றனர். இவை அதிவிரைவாக இணையத் தளங்கள் மூலட்ம் உலகம் முழுவதும் பரவிப் பாதிப்பை ஏற்படுத்தும் அபாயமும் உள்ளது.

# அட! இப்படியா!!



## உலகின் மகா ஒல்லியான ஸ்கானர்

ஆ... எனது கணனி மேசையில் இவ்வளவு இடத்தை விழுங்கிவிட்டதே ஸ்கானர் என்று அலறுபவர்களுக்காக இதோ! வந்துவிட்டது ஹவ்லெட் பக்காட்டின் (Hewlett Packard) ஸ்கான்ஜெட் 4670.

கணனி உலகில் ஸ்கானர்கள் எப் போதும் வெறுத்து ஒதுக்கப்பட்டு வந்தன. காரணம். அவை கணனிகள் வைக்கப்படும் மேசைகளில் கைப்பற்றிய இடம் கொஞ்சநஞ்சமல்ல. 'ஸ்கான்ஜெட் 4670' என்பது மிகவும் மெலிதான அதேசமயம் மிகவும் அழகான - அடக்க ஒடுக்கமான - ஸ்கானர் இயந்திரம். புகைப்படங்கள் வைக்கப் பயன்படும் சட்டத்தின் (Picture Frame) அளவையான கணனி சாதனம் தான் இது.

வழக்கமான ஸ்கானர்களிலிருந்து மாறுபட்ட இது ஒரு புகைப்படச் சட்டம் போலவே தோற்றமளிக் கின்றது. ஒரு புகைப் படத்தை இந்த ஸ்கானரிற்கும் அதன் நிறுத்திக்கு மிடையே மிகவும் எளிதாக நுழைத்துவிடமுடியும். நுழைந்ததுதான் தாமதம். புகைப்படத்தின் விவரங்களைக் கணனிக்கு விளங்கும் விதமாகக் கணனிப் பாஷைக்கு மாற்றும் சாதனம் (Image Sensor) உடனே படத்தின் குறுக்காகத் தொழிற்பட ஆரம்பித்து விடும். இதை ஒளிபுகவிடும் மையத்தினூடாக நாம் தெளிவாகக் காணமுடியும்.

மேசையில் இடத்தை விழுங்கும் ஸ்கானர்களுக்குப் போட்டியாகத் தயாரிக்கப்பட்ட இது. கணனி உலகில் ஒரு புதுமை. வழக்கமான ஸ்கானர் இயந்திரங்கள் கணனி மேசைக்களில் கிடையாக வைக்கப்படுகின்றன. அவை மேசையில் விழுங்கி ஏப்பம்விடும் இடத்தின் அளவோ ஒரு சதுர அடிகளுக்கும் அதிகம்.

ஆனால். மகா மெல்லியதாக இருக்கும். 'ஸ்கான்ஜெட் 4670'. மேசையில் கபளீகரம் செய்யும் இடம் வெறும் நடுத்தர அளவிலான அகராதியொன்று வைக்கப்படுவதற்குப் போதுமான இடம் மட்டுமே.

இது 45 கோணத்தில் நிலைநிறுத்தியபடியே மேசையில் வைக்கப்படும். மூர்த்தி சிறிதானாலும் இதன் கீர்த்தி பெரிது. இந்த ஸ்கானிற்கும் அதன் நிறுத்திக்குமிடையில் செலுத்தப்படமுடியாத புத்தகங்கள் போன்ற மிகவும் தடித்தவற்றின் டிஜிட்டல் படங்களைப் பெறவேண்டுமாயின் புத்தகத்தைக் கிடையாக வைத்துவிட்டு அதன் மேலாக ஸ்கானரைக் கிடையாக வைத்தால் போதுமானது. இதில் பொருத்தப்பட்டுள்ள இரு ஆழிகள் (Buttons) மூலம் பிரிண்டருக்கோ (Printer) அல்லது ஒன்லைனுக்கோ நேரடியாகவே படங்களை அனுப்ப முடியும் என்பது இதன் சிறப்பம்சமாகும். ★

இந்த நிலையில். செல்லிடப் பேசிகள் (செல்போன்) மற்றும் கையடக்க கணனிகள் மூலமும் 'வைரஸ்' பரவும் ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது. செல்லிடப்பேசிகளைப் பயன்படுத்தி மின் அஞ்சல் இணையத்தள வசதிகளைப் பெறுவது தற்போது அதிகரித்து வரு கிறது. மேலும் நவீன செல்லிடப் பேசிகளைப் பயன்படுத்தி இணையத் தளங் களில் இருந்து தகவல்களை இறக்குவதும் (டவுன் லோட்) அதிகரித்துள் ளது. குறிப்பாகப் இளைஞர்கள் இணையத் தளங்களில் இருந்து பாடல்கள். படங்கள். இசைத் தொகுப்புகளை செல்லிடப் பேசிகள் மூலம் இறக்குமதி செய்கின்றனர்.




இதன்காரணமாக இணையத் தளங்கள் வழி யாக செல்லிடப்பேசிகளுக்கு 'வைரஸ்'கள் பரவும் அபாயமும் அதிகரித்துள்ளது.

ஒருவரது செல்லிடப் பேசியில் 'வைரஸ்' தாக்கி னால் அதன்மூலம் அல்லது அதில் இருந்து மற்ற செல் லிடப்பேசிகளுககும் 'வைரஸ்' பரவும் ஆபத் தும் இருக்கிறது. செல்லிடப்பேசிகளைப் பயன்படுத் துவது அதிகரித்து வரும் நிலையில். இனிவரும் காலங்களில் செல்லிடப்பேசிகள் மூலம் கணனி வைரஸ் பரவுவதும் அதிகரிக்கும் என்ற அச்சம் நிலவுகிறது.

இதுபோன்ற ஒருநிலை ஏற்பட்டால் செல்லிடப் பேசித் தகவல் தொடர்புகள் பாதிக்கப்படும் அபா யம் உள்ளது. எனவே. செல்லிடப்பேசிகள் மூலம் 'வைரஸ்' பரவாமல் தடுப்பது பற்றிய ஆய்வுகள் நடந்து வருகின்றன.

★ ★ ★

தயாரிப்பு: கனிமொழி

## உலகின் மிகப்பெரியது

அத்தியாவசியமான பொழுதுபோக்கு சாதனங்களில் ஒன்றாக மாறிவரும் தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிப்பில் பல புதுமைகளும். நவீன வசதிகளும் நாள்தோறும் அறிமுகமாகி வருகின்றன.

ஆரம்ப காலங்களில் கறுப்பு. வெள்ளை திரை கொண்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டன. பின்னர் வண்ணத்திரை கொண்ட தொலைக் காட்சிப் பெட்டிகள் உருவாக்கப்பட்டன. பெரிய உருவத்துடன் அதிக எடை கொண்டதாக ஆரம்பகால தொலைக்காட்சிப் பெட்டிகள் இருந்தன. நவீன தொழில்நுட்பங்கள் பயன் படுத்தப்பட்ட பிறகு தட்டை யான அளவில் தொலைக் காட்சிப் பெட்டிகள் தயாரா னது.




தொலைக்காட்சிப் பெட்டி களில் அவற்றின் 'திரை' அளவுகளை வைத்து சிறி யது. நடுத்தரம். பெரியது என்று தரம் பிரிக்கின்றனர். 14 அங்குலம் (திரை) அள வில் இருந்து தொலைக் காட்சிப் பெட்டிகளின் திரை அளவுகள் உள்ளது.

தற்போது உலகிலேயே மிகப் பெரிய திரை அளவு கொண்ட வண்ண தொலைக்காட்சிப் பெட்டியை கொரிய நாட்டின் சாம்சுங் நிறுவனம் உருவாக்கி இருக்கிறது. 57 அங்குலம் (145 செண்டி மீட்டர்) திரை அளவு கொண்ட இந்த மிகப்பெரும் தொலைக்காட்சிப் பெட்டி 4.75 செண்டி மீட்டர் (1.9 அங்குலம்) அகலம் கொண்டது. இதன் எடை 21கிலோ.



## தூக்கம் நினைவுகளை மீட்டெடுக்கும்

ஒரு நாளில் உங்கள் நினைவில் இருக்க வேண்டிய சிறிய விடயங்கள் அல்லது நீங்கள் சந்தித்த நபர்களின் பெயர்களை உங்களால் உடனடியாக ஞாபகத்திற்குள் கொண்டுவர முடியவில்லையா? அப்படியானால் தூங்குவதற்கு முயற்சியுங்கள்.

என்ன இது பைத்தியக்காரத் தனமாக இருக்கிறதே என்கிறீர்களா? இதனை நாங்கள் சொல்லவில்லை, சிக்காக்கோ பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டறிந்து சொல்லியுள்ளார்கள். ஒரு நாளில் கொஞ்ச நேரம் கண்ணை மூடிக்கொள்வது அன்றையதினம் நடந்த முக்கிய விடயங்கள் பற்றிய நினைவுகளை மீட்டுப்பார்க்கும்திறனை வளர்க்கின்றது என்கிறார்கள் அவர்கள்.

இந்த ஆய்வுக்காக ஒரு தொகுதி கல்லூரி மாணவர்கள் பயன்படுத்தப்பட்டனர். அவர்கள் இரு பகுதியினராகப் பிரிக்கப்பட்டனர். ஒரு குழுவினர் 12 மணித்தியாலங்கள் தொடர்ந்து விழித்திருந்தனர். மற்றைய குழுவினர் 12 மணித்தியாலங்கள் உறங்கினர். இவர்களின் நினைவாற்றலில் இருந்துதொடராகச் சில ஒலிச் சொற்கள் கேட்கப்பட்டன.

உறங்கிய குழுவினர் மற்றைய குழுவினரை விட அதிகம் சொற்களை நினைவுபடுத்தித் தெரிவித்தனர். இதிலிருந்து இடைவிடாது மூளையில் நினைவுகள் பதிவு செய்யப்படுகின்றதுடன் அவை மேலும் திடமாக்கப்படுகின்றன என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

அதாவது, நினைவுகளை மீட்பதற்கு தூக்கம் ஒரு சிறந்த வழியாகலாம். அதற்காக கும்பகர்ணத் தூக்கம் எல்லாம் இதற்கு உதவுமா என்பது பற்றி ஆய்வாளர்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. ★

# காவல் டைனோசர்!

பிரேம்



20 நூற்றாண்டுகளாக மனித னுக்கு மனிதனையே பார்த்துப் பார்த்து அலுத்துவிட்டது. இன்னொ ருவர் மீது நம்பிக்கை வைப்பது என் பது தற்கொலைக்கு ஒப்பானதாக மாறிவருகின்ற காலம் இது. எதிரி லிருப்பவர் எப்போது என்ன செய்வார் என்பதைக் கணிக் கவே முடியாம லுள்ளது. மனித வாழ்க்கை வேறு இயந் திரத்தனமாக மாறிவரு கின்றது.

இயந்திரத்தனமான மனிதனைவிட மனித வடிவிலான இயந்திரங் களையே நம்பிக்கொள்ளலாம் என்ற முடிவு நோக்கி மேற்கு நாட்டவர்கள் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு பல்தேசிய நிறுவனங்களும் தூபம் போட்டு வருகின்றன.

ரோபோக்கள், இனிவரும் காலங் களில் மக்களின் தோழர்கள். இவை தான், ஜப்பான் மற்றும் மேற்கு நாடு களில் தற்போது அடிக்கடி ரோபோக் கண்காட்சிகள் நடக்கின்றன. இவை தொழிற்சாலைகளிலோ நிறுவனங் களிலோ பயன்படுத்தப்படுபவை அல்ல. மனிதனுக்கு உதவக் கூடியவை. மகிழ்விக்கத்தக் கதாக ஆடக்கூடியவை; பாடக்கூடியவை; நடன மாடக் கூடியவை; சில சம யங்களில் பேசும் வல்ல மையும் கொண்டவை.

ஜப்பானின் சொனி (Soney), சன்யோ (Sanyo) போன்ற நிறுவனங்கள் ரோபோ தயாரிப்பில் அதிக ஆர்வம்காட்டிவருகின்றன.


அந்த வகையில் தற்போது வந்துள் ளது, காவல் நாய் ரோபோ (Bull-dog Robo). சன்யோ மற்றும் தம்க்ஸ் நிறுவனங்கள் இணைநது இந்த வீட்டுக் காவல் நாய் ரோபோவை உருவாக்கி உள்ளன.

வீட்டினுள் அத்துமீறி ஊடுருவு பவர்களை அல்லது நெருப்புப் பற் றிக் கொண்ட தகவலை இல்லை யேல் இரண்டையுமே தனது உரிமை யாளரின் செல்லிடப்பேசிக்கு (Cell Phone) உடன் அனுப்பிவைக்கும் திறன் படைத்தது இந்தக் காவல் நாய்.

இந்தவகையான 50 ரோபோக் களை அடுத்த வருடத்தில் விற்பனை செய்வதற்கு உற்பத்தி நிறுவனங் கள் தீர்மானித்துள்ளன.

ஆடக்கூடிய, பாடக்கூடிய, சொல் வதை உணரக்கூடிய ரோபோ வகை களை சொனி நிறுவனம் உற்பத்தி செய்கிறது. தொடர்ந்து அதனை 'மனிதனாக்கும்' முயற்சியில் இந்த நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

[illegible] காட்சியில் 35 நிறுவனங்களால் விதம்விதமான 79 ரோபோக்கள் காட் சிப்படுத்தப்பட்டன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவம், செயற்பாடு கொண்டவை. பார்ப்பவர்களை வாங் கத் தூண்டுபவை. இயந்திரத்தை மனிதனாக்கும் முயற்சியிலமைந்த ரோபோக்களே அவற்றில் அதிகம்.



காட்சிப்படுத்தப்பட்டவற்றில் சன்யோ, தம்ஸ்க் நிறுவனங்களின் கூட்டுத் தயாரிப்பான காவல்நாய் ரோபோ சற்று வித்தியாசமானது. பார்ப்பதற் குப் பயங்கரமானது. மனிதத் தன் மையே இல்லாத ஒரு மிருகம் மாதி ரியானது. இதற்கு பான்றியு (Banryu) என்ற பெயரிட்டுள்ளார்கள். ஜப்பா னிய மொழியில் காக்கும் டைனோ சர் என்று அதற்கு அர்த்தம். பார்த் தாலும் பயங்காட்டும் மிருகமாக அது அப்படித்தான் இருக்கின்றது.

சுமார் மூன்றரை அடி (39.4 Inches) நீளம் கொண்ட பன்றியு சுமார் மூன்றடி (31.5 Inches) உய ரமும் கொண்டது. சுமார் 43 கிலோ நிறையுடையது. ஆசையாகத் தூக்கி யெல்லாம் கொஞ்ச முடியாது. நிறை மட்டும் காரணமல்ல அதன் அமைப் பும் அப்படிப்பட்டது.

(11ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2003 வெறும் பேச்சுக்களோ

**ஜனவரி**

ஜன.-1 படையினரின் புத்தாண்டு வேட்டு பெண்ணின் வயிற்றைப் பதம்பார்த்தது.
ஜன.-3 வலி.வடக்கு மக்கள் மறியல் போராட்டம்.
ஜன.-3 நான்காம் கட்டப்பேச்சுக்கு புலிகள் குழு தாய்லாந்து பயணம்.
ஜன.-3 கல்லடியில் புலிகளின் அலுவலகத்தைச் சுற்றி வளைத்துப் படையினர் தேடுதல்.
ஜன.-4 யாழ்.பல்கலைக்கழகத்துக்குள் 'ராக்கிங்' வேண்டாம் - மாணவர் ஒன்றியம் பகிரங்க அறிவிப்பு.
ஜன.-6 நான்காம் கட்ட சமாதானப் பேச்சு தாய்லாந்தில் ஆரம்பம்.
ஜன.-6 கவிஞர் அப்துல் ரகுமான் யாழ்.வருகை.
ஜன.-6 இலங்கைக்கான அயர்லாந்துத் தூதுவர் பிலிப் மக்டொனக் யாழ். வருகை.
ஜன.-7 இலங்கை அரசுப் பிரதிநிதிகளையும் விடுதலைப் புலிகளையும் கொண்ட மோதல் தணிவுக்கான (De-escalation) உபகுழு கலைக்கப்பட்டது.
ஜன.-10 வேம்படி மகளிர் கல்லூரியில் பொங்கல் வர்த்தகக் கண்காட்சி.
ஜன.-16 புலிகளின் குரல் ஒலிபரப்பு விஸ்தரிப்பு.
ஜன.-16 தாயகத்தின் புனர்நிர்மாண பணிகளுக்கு உதவ வந்த உலக வங்கிக்கு தலைவர் பிரபா வாழ்த்து.
ஜன.-18 இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் எவான் யாழ்.வருகை.
ஜன.-18 ஜனாதிபதி - அமைச்சர் மகேஸ்வரன் சந்திப்பு.
ஜன.-20 எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ யாழ்.விஜயம்.
ஜன.-22 படையினரின் ஆளில்லா வேவு விமானம் அளவெட்டியில் வீழ்ந்தது.
ஜன.-23 'உதயன்' வாங்குவதை நிறுத்தவும், தடுக்கவும் யாழ். பல்கலைக்கழக மாணவர் கூட்டத்தில் முடிவு.
ஜன.-29 முஸ்லிம்களின் தனித்தேசம் கிழக்கில் பிரகடனம்.
ஜன.-31 அமைச்சர்கள் வருகையைக் கண்டித்து குடாநாட்டில் கறுப்புப் பட்டிப்போர்.


ஆரம்பத்தில் நம்பிக்கை


வாழ்விட உரிமைக்கான போராட்டம்

**பெப்ரவரி**

பெப்.-4 இலங்கையின் சுதந்திர தினம் குடாநாட்டில் துக்க தினமாக அனுஷ்டிப்பு.
பெப்.-5 ஓய்வுபெற்ற இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் சதீஷ் நம்பியார் யாழ்.விஜயம்.
பெப்.-6 நெடுந்தீவுக் கடலில் புலிகளின் 2படகுகளை கடற்படையினர் சுற்றி வளைத்து முற்றுகை.
பெப்.-7 புலிகள் தமது படகைத் தகர்த்து தமக்கும் தீவைத்து வீரச்சாவு. (மூன்று புலிகள் பலி).
பெப்.-7 ஐந்தாம் சுற்றுப்பேச்சு பேர்லினில் ஆரம்பம்.
பெப்.-11 பிரான்ஸ் பிரதி அமைச்சர் யாழ்.விஜயம்.
பெப்.-12 மானிப்பாயில் பெண் போராளிகள் மீது படையினர் கொடூரமான தாக்குதல்.
பெப்.-13 யாழ். மேயரும் உறுப்பினர்களும் ராஜினாமா; பொது நூலகத் திறப்புவிழா ரத்து.
பெப்.-15 கிளாலியில் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவிய சிப்பாய் சூட்டுக்குப் பலி.
பெப்.-20 தமிழீழப் பெருவிளையாட்டு விழா ஆரம்பம்.
பெப்.-24 கொழும்பு மறைமாவட்ட பேராயர் தலைமையிலான குழு யாழ்.விஜயம்.
பெப்.-27 பொதுநலவாய அமைப்புகளின் செயலாளர்நாயகம். டொன் மக்கினன் யாழ்.வருகை.
பெப்.-28 வடக்கு - கிழக்கு புனரமைப்பு நிதியம் உலக வங்கியின் கண்காணிப்பின் கீழ். ஒப்பந்தம் கைச்சாத்து. (புலிகள் - உலகவங்கி).


உருகும் உறவுகள்

**மார்ச்**

மார்ச்-2 விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் வன்னி வந்தார்.
மார்ச்-5 தலைவர் பிரபா- கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் ட்ரைகி டெலிவ்ஸன் வன்னியில் சந்திப்பு.
மார்ச்-7 கூட்டமைப்பு எம்.பிக்கள் - பாலா சந்திப்பு.
மார்ச்-10 கிழக்குக் கடலில் புலிகளின் கப்பல் கடற்படையினரால் தாக்கியழிப்பு; 11போராளிகள் வீரச்சாவு.
மார்ச்-10 சமாதான முயற்சியைக் கண்டித்து கொழும்பில் பேரணி.
மார்ச்-11 தமிழீழ நீதிமன்ற வளாகத்தை மதியுரைஞர் பாலசிங்கம் கிளிநொச்சியில் திறந்து வைத்தார்.
மார்ச்-14 நோர்வே - பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் - அன்ரன் பாலசிங்கம் சந்திப்பு.
மார்ச்-18 ஆறாவது சுற்று சமாதானப் பேச்சு ஜப்பானில் ஆரம்பம்.
மார்ச்-28 புலிகளின் அரசியல் விவகாரக்குழு வெளிநாடு புறப்பட்டது.


விடைபெற்ற தருணம்

**ஏப்ரல்**


ஏப்.-2 பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா யாழ். விஜயம்.
ஏப்.-20 மருத்துவ சேவையில் 50 வருடங்களைப்பூர்த்தி செய்த டாக்டர் கெங்காதரனுக்கு தலைவர் பிரபாகரன் நினைவுப் பரிசில் வழங்கினார்.
ஏப்.-21 வாஷிங்ரன் கூட்டத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டதன் எதிரொலியாக பேச்சுக்களில் கலந்துகொள்வதை புலிகள் தற்காலிக இடைநிறுத்தினர்.
ஏப்.-25 முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை காலமானார்.
ஏப்.-26 பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் யாழ். வருகை.
ஏப்.-27 ஆனையிறவு தளம் தகர்ப்பு பளையில் வெற்றி விழா.


வெற்றியின் பரிசு

**மே**

மே-1 யுத்தத்துக்கு எதிரான கோஷத்துடன் யாழ். நகரில் கூட்டு மே தினம்.
மே-1 யாழ். கோட்டையில் படைத்தளத்துக்கு புலிகள் ஆட்சேபம். பாதுகாப்பு செயலருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்.
மே-2 2ஆவது உலக இந்து மாநாடு கொழும்பில் ஆரம்பம்.
மே-5 படைமுகாம் அமைப்பதை எதிர்த்து யாழ். கோட்டை முன்பாக மறியல்.
மே-5 பாலசிங்கம் மீண்டும் வன்னி வந்தார்.
மே-6 தலைவர் பிரபாகரன் - ஜப்பான் விசேட தூதுவர் யசூஷி அகாஷி சந்திப்பு.





தொகுப்பு: ராஜராஜன்

## மாறியது உலகி

மே-8 உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கையை ஜெனரல் சதீஷ்நம்பியார் அரசிடம் சமர்ப்பித்தார்.
மே-9 யாழ். பிராந்திய இந்துமாநாடு ஆரம்பம்.
மே-10 அமரர் குமார் பொன்னம்பலத்துக்கு 'மாமனிதர்' விருதை தலைவர் பிரபா வழங்கினார்.
மே-10 அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் அவசரமாக லண்டன் பயணம்.
மே-13 யாழ். போதனா வைத்தியசாலையில் முதல் 'சார்ஸ்' நோயாளி எனச்சந்தேகம்.
மே-14 'சார்ஸ்' நோயாளி எனச்சந்தேகிக்கப்பட்டவர் மரணம்.
மே-18 இரத்தினபுரியில் பெரும் மண்சரிவு; 75 பேர் பலி.
மே-22 புலிகளின் புலனாய்வு உறுப்பினர் நிந்தவூரில் சுட்டுக்கொலை.
மே-23 காரைநகர் முகாமைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் புலிகளிடம் சரண்.
மே-25 தென் மாகாண அமைச்சர் ஒருவர் கொழும்பில் சுட்டுக்கொலை.
மே-27 'றோ' உயர் அதிகாரி யாழ். விஜயம்.

**ஜூன்**

ஜூன்-7 தெளிவான வரைவை முன்வைத்தால் பேச்சைத் தொடரமுடிவுமெனப் புலிகள் அறிவிப்பு.
ஜூன்-8 பிரதமர் ரணிலுக்கு எதிராக ஜே.வி.பி. ஜப்பானில் ஆர்ப்பாட்டம்.
ஜூன்-9 டோக்கியோ உதவி வழங்கும் மாநாடு ஆரம்பம்.
ஜூன்-11 பிரதமர் ரணிலுக்கு 'ஆசிய கதாநாயகன்' விருது.
ஜூன்-14 கிழக்கு கடலில் புலிகளின் கப்பல் கடற்படையினரால் தாக்கி அழிப்பு.
ஜூன்-14 ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் சுபத்திரன் சுட்டுக்கொலை.
ஜூன்-23 புலனாய்வுப்பிரிவு பொலீஸ் அதிகாரி தெஹிவளையில் சுட்டுக்கொலை.
ஜூன்-27 யாழில் பொங்கு தமிழ் நிகழ்வு.


உரிமைக்காக திரண்ட மக்கள்

**ஜூலை**

ஜூலை-1 பிந்துனுவெவ முகாம் படுகொலை தொடர்பாக இரண்டு பொலீஸார் உட்பட ஐவருக்கு நீதிமன்றம் மரண தண்டனை.
ஜூலை-4 அரியாலை நெடுங்குளம் பகுதியில் 3 மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிப்பு.
ஜூலை-15 புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர் என்.கே. பத்மநாதன் காலமானார்.
ஜூலை-23 யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சென்ற அமைச்சர் ஜயலத் மாணவர்களால் திருப்பியனுப்பப்பட்டார்.

**ஓகஸ்ட்**

ஓக.-3 ஜப்பானிய சிரேஷ்ட பிரதி வெளிவிவகார அமைச்சர் ரெட்சுவோ யானோ யாழ். வருகை.
ஓக.-7 இந்திய மீனவர் 10 பேர் வடமராட்சி மீனவரால் பிடிக்கப்பட்டனர்.
ஓக.-14 தாய்லாந்துப் பிரதமர் இலங்கை விஜயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாடு விடைபெற்றது



## ...லகின் பார்வை

ஓக.-17 இந்திய மீனவர் 60 பேர் நெடுந்தீவு மீனவரால் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

ஓக.-20 இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஆராய புலிகள் குழு பிரான்ஸ் பயணம்.

### செப்ரெம்பர்

செப்.-4 பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் வன்னியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்.

செப்.-7 தமிழீழ காவல் துறை நடுவப்பணியகத்தைத் தலைவர் பிரபா திறந்து வைத்தார்.


செப்.-9 சந்நிதி ரதோற்சவத்தில் கட்டுத்தேர் சரிந்தது.

செப்.-10 டென்மார்க் தூதுவர் மைக்கல் ஸ்ரீவன் பேர்க் வன்னி விஜயம்.

செப்.-19 கனேடியத்தூதுவர் வயேறி ஹேமன்ட் வன்னி விஜயம்.

செப்.-22 சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் வன்னி விஜயம்.

செப்-24 வவுனியாவில் பொங்குதமிழ்.



எதிர்காலம் பற்றிய ஆய்வு

### ஒக்ரோபர்

ஒக்.-2 இடைக்கால வரைபை இறுதியாக்க புலிகள் குழு அயர்லாந்து பயணம்.

ஒக்.-3 யாழ்.மடத்தடியில் இராணுவ ட்ரக்மோதி இளைஞர்கள் இருவர் பலி; ஆத்திரமடைந்த மக்கள் படையினர் மீது கல்வீச்சு.

ஒக்.-8 மஹாவித்துவான் வீரமணி ஐயர் மாரடைப்பால் காலமானார்.

ஒக்.-15 தலதாமாளிகைக் குண்டு வெடிப்பில் மூவருக்கு மரண தண்டனை.

ஒக்.-23 'கராத்தே தந்தை' பொனி றொபேட்ஸ் தேசியத் தலைவரால் கௌரவிப்பு.

ஒக்.-24 பிரபல வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன் யாழ்.வருகை.

ஒக்.-27 படைகளின் தலைமை அதிகாரியாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல பதவியேற்பு.

ஒக்.-29 சிங்கள - தமிழ் கலைஞர் ஒன்று கூடலில் இன வாதிகள் புகுந்து அடிதடி ரகளை.

ஒக்.-31 தமது இடைக்கால நிர்வாக வரைபை புலிகள் அரசிடம் சமர்ப்பித்தனர்.



வரலாற்றுத் திருப்பம்

### நவம்பர்

நவ.-4 ஜனாதிபதியின் திடீர் அதிரடி நடவடிக்கை; 3 அமைச்சு பதவிகள் பறிப்பு; நாடாளுமன்றமும் ஒத்திவைப்பு.

நவ.-13 தலைவர் பிரபா- நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் சந்திப்பு.

நவ.-14 அரசியல் அதிகார இழுபறி முடியும் வரை சமாதான முயற்சிகளை இடைநிறுத்துவதாக நோர்வேக் குழு அறிவிப்பு.

நவ.-19 2004 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு.


நவ.-22 சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் படையினரால் சோதனை.

நவ.-26 நாகர்கோவிலில் 11 படைச் சிப்பாய்கள் சகதியில் சிக்கி மரணம்.

நவ.-26 ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பெட்டன் தலைவர் பிரபாவைச் சந்தித்தார்.

நவ.-27 "பிரிந்து தனியரசை அமைக்கும் நிலைக்கு தமிழரைத் தள்ளாதீர்!" - மாவீரர் தின உரையில் தலைவர் பிரபா சிங்களத் தலைவர்களுக்கு வேண்டுகோள்.

நவ.-30 கூட்டணியின் தலைமைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



புஷ் இருக்கப் பயம் ஏன்?

### டிசெம்பர்

டிசெ.-4 வலி.வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்காததை எதிர்த்து உயர் நீதிமன்றில் உரிமை மீறல் வழக்கு. - மாவை எம்.பி. தாக்கல் செய்தார்.

டிசெ.-8 இராணுவ வாகனங்களைத் தடுத்து அமைச்சர் மகேஸ்வரன் மறியல் போர்.

டிசெ.-9 யாழ்.பஸ் நிலையத்தில் சிப்பாய் சுட்டு இருவர் படுகாயம்.

டிசெ.-17 கூட்டணிச் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்ட நீதிமன்றம் இடைக்காலத்தடை.

டிசெ.-17 யாழ். தளபதியாக மேஜர் ஜெனரல் எம்.டி. சுசில் சந்திரபால பதவியேற்பு.

டிசெ.-22 புதிய பொலிஸ்மா அதிபராக இந்திரா டிசில்வா பதவியேற்பு.

டிசெ.-23 விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரம் குடாநாட்டில் ஆரம்பம்.



மடத்தடியில் கற்ற பாடம்



முடிவே இல்லாத இழுபறி

# மறைந்தவர்கள்

## முன்னாள் ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை



இருபது ஆண்டு காலமாக யாழ்.மறைமாவட்ட ஆயராகப் பதவி வகித்து இளைப்பாறிய மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை ஏப்ரல் 25ஆம் திகதி அதிகாலை 2மணிக்கு யாழ்.திருச்சிலுவைக் கன்னியர் வைத்தியசாலையில் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 86.

மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை 1973ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டுவரை யாழ்.ஆயராகப் பணிபுரிந்தார். ஈழத்தமிழர் வரலாற்றில் இக்கட்டான காலப் பகுதியாகக் கருதப்படும் சுமார் 20ஆண்டுகள் யாழ்.ஆயராக இவர் சிறப்பாகப் பணியாற்றினார். 1917ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம 9ஆம் திகதி கரம்பொன்னில் பிறந்த அவர், ஆரம்பக்கல்வியை ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரியிலும் உயர் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். 1935ஆம் ஆண்டு ரோமில் பாப்பரசரின் வேதபோதகக் கல்லூரியில் குருத்துவக் கல்வியை மேற்கொள்ளச் சென்றார். 1941இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் பல்வேறு கல்லூரிகளிலும் பங்குகளிலும் பணியாற்றிய இவர், 1967இல் திருமலை துணை ஆயராக நியமிக்கப்பட்டார். பின்னர் 1973இல் யாழ்.ஆயராகப் பதவியேற்ற இவர், 1992இல் அப்பணியில் இருந்து ஓய்வுபெற்றார். 1999இல் யாழ். பல்கலைக்கழகம் ஆயருக்கு மெய்யியல் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

## என்.கே. பத்மநாதன்



ஈழத்தின் புகழ்பூத்த கலைஞரும் நாதஸ்வர விற்பன்னருமாகிய கந்தசாமி பத்மநாதன் கடந்த ஜூலை மாதம் 15ஆம் திகதி கொழும்பில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 72.

அளவெட்டியைச் சேர்ந்த இவர், தனது 21ஆவது வயதில் இருந்து இறக்கும் வரை தனது கலைப் பணியை சைவமரபுப்படி சீராக மேற்கொண்டு வந்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் 47வருடங்களாக ஆஸ்தான வித்துவானாக இருந்து உற்சவ காலத்தில் கானமழை பொழிந்து வந்தார்.

அவரின் இசைப்பணியைப் பாராட்டி இலங்கை அரசு கலாசூரி, கலாபூஷணம் ஆகிய பட்டங்களை அவருக்கு வழங்கிக் கௌரவித்தது. இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர், லண்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் இவர் சென்று இசைமழை பொழிந்துள்ளார்.

பல அரச வைபவங்களிலும் இவர் இசை மழை பொழிந்துள்ளார். யாழ்ப்பாணத்திலும், சென்னையிலும் நடந்த தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளிலும், அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் நடத்திய இசை விழாக்களிலும் ஆடிவேல் விழாக்களிலும் இவர் நாதஸ்வரம் வாசித்துள்ளார்.

இவரது கலைச்சேவைக்குக் கிடைத்த கௌரவமாக இவரது புகைப்படம் கொழும்பு நகர மண்டபத்தில் கலைஞர்கள் வரிசையில் வைக்கப்பட்டுள்ளது. கலாரூபாகி ஆனந்தகுமாரசாமிக்குப் பின்னர் நகர மண்டபத்தில் படம் வைத்து கௌரவிக்கப்பட்ட தமிழர் பத்மநாதனே ஆவார்.

## மஹாவித்துவான் வீரமணி ஐயர்



ஈழத்தின் புகழ்பூத்த மூத்த கலைஞர்களில் ஒருவரான இணுவிலைச் சேர்ந்த மஹாவித்துவான் மா.த.ந.வீரமணிஐயர் கடந்த ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 72.

இவர் 1931ஆம் ஆண்டு இணுவிலில் பிறந்தார். சிறுவயதிலேயே பல்துறை விற்பன்னராக விளங்கினார். தனது 22ஆவது வயதில் தமிழ்நாடு கலாஷேத்திர நடனப் பள்ளியில் சேர்ந்தார். அங்கு பரதக்கலையையும் இசைக்கலையையும் பயின்று நாடு திரும்பினார். பின்னர் பல பாடசாலைகளில் சங்கீத ஆசிரியராகவும் நாட்டிய ஆசிரியராகவும் பணிபுரிந்த இவர் பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் சுமார் 33 வருடங்கள் விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நுண்கலைப்பீடம் நிறுவப்படுவதற்கு உழைத்தவர்களில் இவரும் ஒருவர். பின்னர் அங்கு விரிவுரையாளராகவும் இவர் பணிபுரிந்தார்.

வீரமணிஐயர் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான ஆலயங்கள் மீது திருவூஞ்சல் பதிகம், கீர்த்தனைகள் ஆகியவற்றைப் பாடியுள்ளார். தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் பல எழுச்சிப் பாடல்களையும் எழுதியுள்ளார்.

தமிழ் கலைகளின் வளர்ச்சிக்கு அரும்பணியற்றிய இவருக்கு யாழ். பல்கலைக்கழகம் 1999ஆம் ஆண்டு கௌரவ முதுகலைமாணிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது. 'கலாரத்னா' கலாபூஷணம், முத்தமிழ்க் கலாநிதி, முத்தமிழ்ச் சுரபி, ஸாகித்திய ஸாகரம், ஸாகித்திய சிரோன்மணி, இயலிசை வாரிதி என்பன உட்பட பல கௌரவப்பட்டங்களும் இவருக்கு வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
பட்டப்பின் படிப்புகள் பீடம்
பட்டப்பின் கல்வித்தகைமை கற்கை நெறி (முழுநேரம் - பகுதிநேரம்)
- 2003/2005

**கல்வியியல் முதுமாணி கற்கைநெறி - 2004**

*மேற்படி இரு கற்கைநெறிகளுக்குமான ஆரம்ப வைபவம்* (Inauguration) 02.01.2004 *காலை 10.00 மணிக்கு நூலக கேட்போர் கூடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும்* 10.01.2004 *காலை 11.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபம், வவுனியா வளாகத்திலும் நடைபெறும்.*

*வவுனியா வளாக புதிய மாணவர்களுக்கு ஆரம்ப நிகழ்வினைத் தொடர்ந்து விரிவுரைகளும் அன்றைய தினமே ஆரம்பமாகும்.*

- பதிவாளர்.
29.12.2003 (C-32416)(12-16)


## ஒன்றுகூடல்

யாழ்.வலயக் கல்வி அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா தலைமையில் வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-7)


**கையடக்கத் தொலைபேசிகள்**
**விற்பனைக்கு**

கையடக்கத் தொலைபேசி Kenwood Japan புத்தம் புதியவை 5000/= மற்றும் சாதாரண கேபிள் தொலைபேசிகள் 1750/= with Locking Facilities.

விவரங்களுக்கு:
திரேசா கொமினிக்கேசன்.
72 A, நக்கா வீதி, யாழ்ப்பாணம்.
(21-14-34) T.P:7080, 2597. (26318)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவைத் தலைவரும் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் சங்கானை கூடத்து மனோன்மணி அம்மன் ஆலய பரிபாலன சபையின் உப செயலாளரும் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தருமான



**உயர்திரு.கந்தையா அருள்லிங்கம் J.P.**

அவர்கள் 29.12.2003 திங்கட்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவிப் பிரமாணம் செய்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிருஸ்ணா ஸ்ரோஸ்,
பேள் நியூ பசன் ஹவுஸ்,
கலைமகள் விலாஸ்.
சங்கானை.
(26514) (18-12-16)



**நலிவுற்றோர் மேம்பாட்டுக்கான**

We Serve

**மாபெரும் இன்னிசை விருந்து**

முதன் முறையாக மனோவின் சிங்கப்பூர் மேடை ஒளி அலங்காரத்துடன் *ராகம்ஸ், கீதம்ஸ்* குழுவினர் இணைந்து ஒரே மேடையில் கான மழை பொழிகின்றனர்.

**காலம் : 01.01.2004 (புதுவருடப் பிறப்பன்று) 5.30 p.m.**
**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**

*உங்களது அன்பளிப்பு ஒரு நலிவுற்றவனை மேம்படுத்த உதவும்.*

**அன்பளிப்பு: 200/=, 100/=**

ரிக்கெற்றுக்கள் பெறும் இடம்:
- V.K. இராசரத்தினம், ஸ்ரான்லி வீதி.
- சண்செயா ஹொட்டேல், பஸ்நிலையம் முன்பாக.
- சமுத்திரா, நவீன சந்தை.
- தயா நகைப்பூங்கா, கஸ்தூரியார் வீதி.

(26523) (32-14-21)

**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்**



**Y.A.சுரேஸ் கோழிப்பண்ணை**

புத்தாண்டு தினத்தைமுன்னிட்டு
எமது வாடிக்கையாளர்களுக்குப்
புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.
இறைச்சிக்கோழி, புறோயிலர்,
கல்பேட்ஸ், சேவல்,
இத்திருநாளில் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: **Y.A. சுரேஸ்**
(கிராமக்கோட்டுச் சந்தியில் இருந்து 150 மீற்றர் உள்)
பருத்தித்துறை.

(26502)(12-16)


## நெஞ்சுவிட்டகலாத 45 ஆம் நாள் நினைவஞ்சலி


| செல்வி வேதநாயகம் ஜீனோவதனி | செல்வி வேதநாயகம் யதுசாலினி | செல்வி வேதநாயகம் கீர்த்தனா |
|---|---|---|
| மலர்வு:20.09.1999 | மலர்வு:16.03.2001 | மலர்வு:29.03.2003 |

உதிர்வு: 18.11..2003

எமது பாசம் நிறைந்த நேசம் மிக்க பேரக்குழந்தைகளே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து 45 நாள்கள் கடந்தாலும்
உங்கள் மழலைப் பேச்சும் நினைவுகளும் எம்மைவிட்டகலாது!
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*தபாற்கந்தோரடி,*
*காரைநகர்.* (26504)(12-16) **சி.மகாலிங்கம் (பேரனார்).**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தவனம் சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ. சங்கம், பண்டத்தரிப்பு)

அன்னை மடியில் 04~02~1942 — இறைவன் மடியில் 11~01~2003

**திதி: 31.12.2003**

ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் நெஞ்சை விட்டகலாத அப்பாவே...!
ஒளி விளக்காய் கலங்கரை விளக்காய் ஒளிவீசி
வழிகாட்டிய எங்கள் அப்பாவே....!
ஆலவிருட்சமாய் குடும்பத்திற்கே நிழல் தந்த
அன்புத் தெய்வமே....!
அன்பு எனும் பாசவலைப் பின்னலில் சிக்கி
எம்மைத் தவிக்க விட்டுச் சென்ற பாசமலரே அப்பா...!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்!

இன்று (31.12.2003) புதன்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி!

*விபுலானந்தர் வீதி,*
*மாதகல்.*

*என்றும் உங்கள் நினைவில் வாடும்*
**குடும்பத்தினர்.**

(26373)(12-16)

## நீங்காத நினைவலைகளில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 - 07 - 1943



மறைவு 11 - 01 - 2003

### அமரர் சபாபதி நாராயணன்

(ஓய்வுபெற்ற கிராமசேவையாளரும் சமாதான நீதிவானும்)

பாசத்தைப் பொழிந்து அன்பாக வளர்த்திட்டு
நேசமுடன் ஒரு வார்த்தை கூறாது
எம்மைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள் அப்பா?
வாழ்வான வாழ்வை விரும்பும் வையத்துள்
நீங்கள் மட்டும் ஏனப்பா?
விண்ணுலகை விரும்பிச் சென்றீர்கள்
நடமாடும் வீட்டினை இன்று படமாக்கிவிட்டீர்கள்
நேசத்தோடு வளர்த்த பிள்ளைகள் இன்று
நினைவிழந்து தவிக்கின்றோம் அப்பா!
சீத்தம் தடுமாறு முன்பே சிறகடித்து வந்துவிடுங்கள்
எங்கள் தெய்வமே! எங்கள் அப்பாவே!

**மனைவி,**
**பிள்ளைகள்.**

(C-32331)(12-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவல் டைனோ...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

படத்தைப் பாருங்கள் புரியும்.

தன்னருகே எவராவது நடமாடு வதையோ, சிறிதாக ஏதாவது பொருள எரிவதையோ உணர்ந்தறியும் திறன் பான்றியுவுக்கு இருக்கின்றது. அந்தத் தகவலை உடனடியாகவே தனது எஜமானரின் செல்லிடப் பேசிக்கும் அறிவித்துவிடும். செல்லிடப் பேசியில் அலறல் எழுப்புவதன் மூலம் (how Ling) அல்லது செல்லிடப் பேசியில் அழைப்பதன் மூலம் (Calling) பான்றியு தனது தகவலை உரிமையாளருக்குத் தெரிவித்துவிடும். பறந்து வந்து மிகுதியைக் கவனித்துக்கொள்ள வேண்டியது அவரதுபொறுப்பு.

உரிமையாளரால் அப்படி உடனடியாக வரமுடியவில்லை என்றால் அவா தான் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே செல்லிடப் பேசி மூலம் பான்றியுவை இயக்கமுடியும். (Controlled by the owner's Phone) தேவைப்பட்டால் வீட்டில் என்ன நடக்கின்றது என்பது தொடர்பான புகைப் படங்களையும் பான்றியு மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இருந்தாலும், மிகமெதுவாக அடியெடுத்து வைக்கும் ஊடுருவல்காரர் களையோ வீட்டுக்கு வெளியே நடமாடுபவர்களையோ கண்டறியும்திறன உண்மையான நாய்க்கு உள்ளது போன்று பான்றியுவுக்குக் கிடையாது.

பான்றியு ஒரு நிமிடத்துக்கு 50 அடி தூரம் நடக்கும். 6 அங்குல உயரமான படிகளை அது ஏறிக்கடக்கும். அதற்கு உயிர்கொடுக்கும் ஒரு மின் சேமிப்புக் கலம் (பற்றரி) ஒரு மணித்தியாலத்திற்கு அதனை உயிரபுடன் வைத்திருக்கும். அது தொடர்ந்து இயங்க வேண்டுமானால் நீண்ட வயரில் அதனைப் பிணைத்துவிடலாம்.

பான்றியுவில் மற்றுமொரு வசதியும் உண்டு. உரிமையாளருக்கும் வெளியாருக்கும் இடையிலான தொடா பாடலுக்கான ஸ்பீக்கர் போனாகவும் (Speaker Phone) அது பயன்படும்.

உரிமையாளருக்கும் பான்றியுவுக்கும் இடையிலான தொடர்பு, அதாவது தொலைபேசித் தொடர்பானாலும் சரி கட்டுப்படுத்தும் சமிஞ்ஞைகளானாலும் சரி அவை பொதுவான தொலைத தொடர்பு ஊடாக மேற்கொள்ளப்படாது.

பாதுகாப்புக் கருதி தனிப்பாவனை கையடக்கத் தொலைபேசி ஒழுங்கமைப்பு (Personal Handyphone System - PHS) ஊடாகவே இத் தொடர்புகள் மேற்கொள்ளப்படும். இணையம் (Internet) ஊடான தொடர்புகள் மேற்கொள்ளப்படவே மாட்டா.

பான்றியுவை வாங்கும் ஒருவர் மூன்று வெவ்வேறு விதங்களில் அதனைக் கட்டுபபடுத்தும் முறைகளைத தெரிவு செய்யலாம். முதலாவது செல்லிடப் பேசிகள் மூலம் கட்டுப்படுத்துவது, இரண்டாவது நீங்கள் பேசுவதைக் கேட்டு அதன்மூலம் செயற்படும்முறை. இந்த முறைமூலம் வீட்டில் இருந்தால் மட்டுமே பான்றியுவின் உரிமையாளர் அதனைக் கட்டுப்படுத்தலாம். மூன்றாவது செல்லப் பிராணி முறை. இந்தமுறை மூலம் உரிமையாளர் பான்றியுவை தனது செல்ல நாய் போன்று பேணலாம். உதாரணமாக 'இரு', 'பணி' என்று உரிமையாளர் கட்டளையிட்டால் பான்றியு, அதனை ஏற்றுநடக்கும்.

பான்றியுவை வீட்டுப் பாதுகாப்பு ரோபோவாக உருவாக்குவதே தமது நோக்கம் என்று அதனை உற்பத்தி செய்த நிறுவனங்கள் கூறுகின்றன. அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் 50 பான்றியுக்களை விற்பனைக்கு விடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 16 ஆயிரத்து 410 டொலருக்கும் கீழான ஒரு விலையிலேயே அது விற்கப்படும் என்று அதிகாரிகள் கூறுகின்றார்கள். அதன விற்பனையைப் பொறுத்தே பெருமெடுப்பிலான உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

புஜிட்சு (Fujitsu) நிறுவனமும் இந்த வகையிலான வீட்டு ரோபோவைத் தயாரித்துள்ளது. ஆனால், அது பான்றியுவை விட உருவத்தில் வித்தியாசமானது. ஆனால், செயற்பாடுகள ஒத்தவையே. அதனையும் அடுத்த வருடத்தில் வர்த்தக மயமாக்குவதற்கு புஜிட்சு தீர்மானித்துள்ளது.

இப்படியே வீடுகளை ரோபோக்கள நிரப்பிக்கொண்டு சென்றால் இன்னும் கொஞ்சக்காலத்தில் மனிதர்கள் ரோபோக்களுடன்தான் பேச வேண்டி வருமோ?

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

தாயின்மடியில் முத்தாக 05 - 01 - 1982



தாயகமண்ணில் வித்தாக 31 - 12 - 1999

### கந்தசாமி லோகேஸ்வரன்

மாவீரன் 2ஆம் லெப்டினன்ட் 'மானவள்ளல்'

கடைக்குட்டி மகனே! எம்கண்கள் நிறைந்த "மகாராஜா"
மண்மீட்க என எண்ணி "மானவள்ளல்" ஆனவனே!
அன்ரிக்கும் அங்கிளுக்கும் பாசமகன் போலிருந்தாய்!
ஆங்கில தேசம் அவர்கள் செல்ல சமராடி நின்றவனே!
தம்பி எப்போ வருவான் என்று தாய்மடி தேடுதையா!
கண்மணியைக் காணாது கண்ணீர் சொரிகின்றோம்!
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும் ஆறாது எம்துயரம்!
நெஞ்சங்கள் இருக்கும்வரை நீங்காது உன்நினைவு!
தெய்வமாக வைத்துத் தினமும் பூசிக்கின்றோம்!
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அம்மா, ஐயா, அண்ணாமார்,
அக்காமார், அத்தான்மார், அண்ணிமார்,
பெறாமக்கள், மருமக்கள், பேர்த்தி
மற்றும் பாசமிகு உறவினர்கள்.

திருவள்ளுவர் வீதி,
வேலணை.

(26430) (26-11-19)





இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

றோயல் குளுக்கோஸ்

100/% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By: Royal Industries, Colombo. ☎ 0112334603

ஏக விநியோகத்தர்கள்: சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

☎: 021 222 2567

சத்திரத்துச் சந்திக்கு அருகில் ⇨

பண்டிகை கால விசேட சலுகை

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ விசேட சலுகை.

ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=

அத்துடன் இலவசமாக E.mail மூலம் உங்கள் உறவுகளுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கலாம்

25.12.2003 தொடக்கம் 01.01.2004 வரை மட்டுமே

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்

303, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்

T.P: 021 222 2670 Fax:021 222 3204, E.Mail: del smskr@eureka lk


## ஈராண்டு நினைவஞ்சலி



பிரம்மஸ்ரீ

### சபாரத்தினக்குருக்கள் மாணிக்கவாசகக் குருக்கள்

சிவன் மடியில் 18.12.1942

சிவன் அடியில் 23.12.2001

திதி: நவமி 31.12.2003

எமதன்புத் தெய்வமே!
நீங்காத நினைவுகளுடன்
வருடம் இரண்டு உருண்டோடி
மறைந்ததென்ன? வற்றாத பாசம்
வைத்தவரே! நாம் வாழும் வரை
உங்களை நினைத்துப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

ஸ்ரீவித்தியா,
இணுவில் கிழக்கு, இணுவில்.
T,P.:021 222 5927

71/5,விகாரை லேன்,
கொழும்பு - 06
T.P.: 0112360032

(21-11-19) (26494)

## 29ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 16 - 03 - 1927



விண்ணில் 22 - 12 - 1974

திருமதி

### கனகாம்பிகை சபாரத்தினம்

திதி: 31-12-2003

மலர்ந்த உங்கள் மதி முகத்தில்
மங்கலக் குங்குமம் இலங்கிட
கருணை மிகுந்த கண்களில்
கனிந்த அன்பு தெரிந்திட - எம்
மனங்களில் உலாவரும் தாயே!
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை?

- குடும்பத்தினர்.

நிரந்தரம்:
'திலகவாசம்',
தபாலக வீதி,
சாவகச்சேரி.

(26512) (26-11-19)

தற்போது:
இல.5, கல்லடி ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

## நீங்காத நினைவில் 11ஆம் ஆண்டு



(C/26323) UTHAYAN Graphics

திதி: 31.12.2003

ஆண்டு பதினொன்றானதப்பா
ஆறவில்லை எம்மனது
தேற்றுகின்றோம் ஆனால் -
தேறவில்லை
தேடுகின்றோம் நாம்
கிடைக்கவில்லை
ஆறுதலுக்கு ஆயிரம்
உறவுண்டு
அப்பா என்ற சொல்லுக்கு
யாருமில்லை!!!

என்றும் நீங்கா நினைவில் : குடும்பத்தினர்

அமரர்

### செல்லையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

தோற்றம்: 03.03.1928

மறைவு: 02.01.1993

கண்டி வீதி, கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகை பழங்களினால், அவற்றின் தரச் சுவைக்கேற்ப

தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசத்தை இன்றே சுவைத்து மகிழுங்கள்.




sunquick

அதிக பழங்கள் அதிக கோப்பைகள்

Grey Worldwide

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்களுக்குள் பகையை வளர்த்து தமிழினத்தைப் பந்தாடக் கூடாது

## கூட்டணித் தலைவர்களுக்கு வேண்டுகோள்

கொழும்பு,டிசெ.31

தமிழீழத்துக்கான அங்கீகாரத்தைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தங்களுக்குள் பகைமையை உருவாக்கித் தமிழ் பேசும் இனத்தைப் பந்தாடக் கூடாது, அதை எந்தத் தமிழ் மகனும் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது தந்தை செல்வா நற்பணி மன்றம்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடையே ஒற்றுமை வேண்டி இந்த அமைப்பு நடத்திய அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தின் பின், கூட்டணித் தலைவர்களை விழித்து வேண்டுகோள் கடிதம் ஒன்றை அது வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று தமிழ் பேசும் இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் உச்சக்கட்டம் அடைந்துள்ளது. இந்த வேளையில் - மிஞ்சியுள்ள இந்தக் கால கட்டத்தில் - தெற்கில் அரசியல் குழப்ப நிலையும் அதிகாரப் போராட்டமும். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் தமிழீழத்துக்கான அங்கீகாரத்தைப் பெற்ற தலைவர்கள் தங்களுக்குள் பகைமைகளை உருவாக்கி தமிழ்பேசும் இனத்தைப் பந்தாடுவது எந்த ஒரு தமிழ் மகனாலும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

தமிழனைக் கடவுள்தான் பாதுகாக்க வேண்டுமென்று தந்தை செல்வா கூறினார். ஆகவே, இந்தக் காலகட்டத்தில் எங்கள் உண்ணாவிரதத்தின் மூலம் தங்கள் மனங்களில் மாற்றங்கள் ஏற்படும் என்பதில் எமக்குச் சந்தேகத்திற்கு இடமே இல்லை.

தாங்கள் அஹிம்சையின் பாசறையில் வளர்ந்த தலைவர்கள் என்ற வகையில் நாம் தங்களிடம் ஒற்றுமையை வேண்டி நிற்கின்றோம்.

எமது வேண்டுகோள்கள் பின்வருமாறு:-

1. இருதலைவர்களும் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கை உருவாக்கிப் புரிந்துணர்வை வளர்க்க வேண்டும்.

2. தற்கால அரசியல் சூழ்நிலைக்கேற்ற வகையில் தங்களை மாற்றி அமைத்துத் தமிழ் பேசும் இனத்தை வழி நடத்த வேண்டும்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புள்ளி விவர பதிவுச் செயற்பாடு

வலி.தெற்கு,டிசெ.31

வலிகாமம் கல்வி வலயத்தில் தரம் 9 புள்ளிவிவரப் பதிவுச்செயற்பாடு தொடர்பான பணிகளுக்காக தரம் 9 இல் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை ஜனவரி 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வலிகாமம் கல்வி வலயத்துக்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தநாகராசா பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார். (ஐ-152)

# களுத்துறை தமிழ்ப் பாடசாலைக்கு சிங்கள ஆசிரியர்கள் நியமனமா?

## கண்டனம் தெரிவிக்கிறார் பிரகாஷ் கணேசன்

களுத்துறை தமிழ் மகாவித்தியாலயத்திற்கு நியமனம் செய்யப்படவுள்ள ஆசிரியர்களில் கணிசமானோர் சிங்கள ஆசிரியர்களாக இருப்பது தமிழ் மக்களின் கல்வி விடயத்தில் காணப்படும் பெரும் இடையூறாகும். இது தமிழ் மக்களின் கல்வி, கலாசார வளர்ச்சிக்கு இடையூறு செய்வதாகவே காணப்படுகிறது. இவ்வாறான நியமனங்கள் தொடருமானால் தமிழ்மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர்.

- இவ்வாறு மேல்மாகாண மக்கள முன்னணியின் பிரசார செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான பிரகாஷ் கணேசன் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில்:-

தமிழ்ப் பாடசாலைகளுக்கு கணிசமான அளவு சிங்கள ஆசிரியர்களை நியமனம் செய்வது என்றால், சிங்களப் பாடசாலைகளுக்கு இதேபோல் தமிழ் ஆசிரியர்களை நியமனம் செய்கிறார்களா?

பேரினவாத அரசியல் கட்சிகள் மாறிமாறி ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களின் கல்வி, கலாசார விடயத்தில் சீரழிவை ஏற்படுத்தவே முனைகின்றன. இப்படியான திட்டமிடப்பட்ட இன ஒடுக்கலும், சிறுபான்மை மக்களுக்கு செய்யப்படும் அநீதிகளும் ஜனநாயகத்திற்கு எதிரான செயலாகும். அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் விடயத்தில் நாம் முக்கிய கவனம் எடுத்துள்ளோம்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் சேரிகள், பின்தங்கிய பிரதேசங்கள் ஆகியவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்கிறோம். எனவே, தமிழ்மக்களுக்கு மிகவும் அவசியமான கல்வி விடயத்தில் இப்படியான திட்டங்களைத் தீட்டி அதை நடைமுறையாக்குவதை வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றுள்ளது.


## யப்பான் சைக்கிள்

▲ கியர், ஓட்டோமற்றிக் லைட், கப் பிறேக் போன்ற விசேட அம்சங்களுடன் பல மொடல்களில் யப்பான் சைக்கிள்.

▲ போலியான பளபளப்புகளை நம்பி ஏமாறாமல் குறைந்த விலையில் கிடைக்கக்கூடியதும் சுலபமான ஓட்டத்திற்கு நீண்டகாலம் செலவின்றி பாவிக்கக்கூடியதுமான ஒரு சைக்கிளை வாங்குவதற்கு வாருங்கள்.

புதுவருடத்தை முன்னிட்டு 1000 ரூபா விலை குறைக்கப்பட்டுள்ளது.

சித்திவிநாயகர் யப்பான் சைக்கிள் (B) பசார்

இல.631A. கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் அருகில்).

(26554) (26-24-11-19)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### பொன்னையா கமலரூபன்

(தமிழ்த்துறை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

குடும்பத்தின் குலவிளக்கே எங்கள் கமலரூபா!
கொடியவன் காலனடா வாழ்க்கையே கொடியதடா
மூன்றாண்டு சென்றதடா முந்தநாள் நினைவது போல்
முற்றத்தில் ஆடுதடா முழுநிலவு உன்முகம்தான்
வண்ணத்துப் பூச்சியைப் போல் வட்டமிட்டுத் திரிந்தவனே
தமிழ்த்தேனை உண்ணவென்று தலைதூக்கி நின்றவனே
அலையழித்த மணல் வீடாய் சிதைந்துவிட
எப்படி மறப்போம் ஏங்கித் தவிக்கின்றோம்
ஏதிலியாய் நிற்கின்றோம் எப்போது நீ வருவாய்.

- குடும்பத்தினர்.

கரவெட்டி. (26566) (26-24-11-19)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை வங்கியின்
வடபிராந்திய
உதவிப் பொதுமுகாமையாளர்
திரு.க.பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்பு மனைவி

### திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்



அவர்கள் நேற்றுமுன்தினம் (29-12-2003) திங்கட்கிழமை காலமானதையிட்டு, அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வங்கிச் சதுக்க வர்த்தகர்கள்,
குமரேஸ் ரேடிங் கொம்பனி,
ஜெயகணேசா ரேடர்ஸ்,
மகாலக்ஷ்மி ரேடர்ஸ்,
நிதர்சன் கிறீம் ஹவுஸ்,
கனன் போட்டோக் கொப்பி சேவிஸ்,
சிவராஜ் ரேடிங் கொம்பனி,
சிதம்பரா ஸ்ரோர்ஸ்.

பருத்தித்துறை.

(சி-32336)(21-24-11-19)


University of Jaffna, SriLanka.
Faculty of Medicine
*Commencement of Course - 2003 Batch*

The Course for the 2003 batch (New Admission) of students will Commence on 05th January 2004.

**Registrar**
University of Jaffna, Sri Lanka.
30-12-2003.



## தேவை

எமது ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர்கள், கணக்காளர், சாரதி ஆகியோர் தேவை (சாரதி 50 வயதுக்கு மேற்பட்டவர்).

7 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:
விளம்பர இல.2134
மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

(26501)



## உதவியாள் தேவை

தனிவீட்டில் வசிக்கும் நோயாளியான மூதாட்டியைப் பராமரிக்க பெண் உதவியாளர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் சந்திக்கவும்.

முகவரி:-
யூனிவேர்சல் தொலைத்தொடர்பகம்
40A, அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(26556)(35-24-11-19)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்.

A/L கலை, வர்த்தகம் 2006

ஆரம்பம்: 03-01-2004 மு.ப 8.00 மணி

| | |
|---|---|
| Acc. திரு.பாலவாசன் | H.C. திரு.பத்மராஜா |
| Eco. திரு.K.உதயன் | Geo. திரு.பாபு |
| B.St. திரு.யசோ | Hin. திரு.N.T.தரன் |
| Log. திரு.சயந்தன் | Drama. திரு.மதி |
| Tam. திரு.குழந்தை பிரிவு I | P.Science திரு.ஸ்ரீரங்கநாதன் |
| திரு.லிங்கம் பிரிவு II | Hist. திரு.சுதன், பத்மன் |
| | Chiri. திரு.வசந்தன் |

அன்றும் இன்றும் இனி என்றென்றும் பொருளியல் திரு.K.உதயன்

பிரிவுI அனுமதிகள் முன்கூட்டியே வழங்கப்படும். பிரிவுII அனுமதி மிக விரைவில்.

(32-24-11-19) (C-32262)


## நீங்கா நினைவில் ஈராண்டு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1921 - 04 - 04 | 2002 - 01 - 06 |

### அமரர் முத்தர் ஆறுமுகம்

(சமாதான நீதிவான்)

திதி: அட்டமி 31-12-2003

ஐயா என்ற அன்புமுகம்
ஆறி அமர்ந்து இறைவனடி சேர்ந்து
ஆண்டதும் இரண்டு ஆகின - இன்னும்
ஆறாத்துயரில் ஆழ்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

திருவள்ளுவர் வீதி,
வேலணை மேற்கு,
வேலணை - 6.

(26561) (26-24-11-19)

## மரண அறிவித்தல்

### தம்பிஐயா மகேந்திரநாதன்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா மகேந்திரநாதன் 28-12-2003 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆசிரியர்கள் சின்னத்தம்பி தம்பிஐயா - தவமணி (கண்ணம்மா) ஆகியோரின் மூத்த புதல்வனும் அற்புதமலரின் அன்புக்கணவரும் பாலகுமாரநாதன், இரவீந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி பா.கி.காந்திமதி (இலங்கை வங்கி), திருமதி இ.ராதிகா (அதிபர்) ஆகியோரின் அன்புமைத்துனரும் பா.லோகினி, பா.கஜனி, இ.லாவண்யா, இ.விமல்காந்த், இ.காருண்யா, இ.விமலின்ஜா ஆகியோரின் பெரியதந்தையும் திரு.திருமதி பாலசிங்கம் தம்பதியரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

B.L.G.Com;
T.P. 2753
ஆனைக்கோட்டை.

தகவல்:
த.பாலகுமாரநாதன்.

(26560) (26-24-11-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்பிரவு ஆராதனை

**31-12-2003**

நீங்கள் புறாச்சிறகுகள் போல.......இருப்பீர்கள்.
*சங்கீதம் 68:13*

**இடம்: கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்.**
**நேரம்: இரவு 10.00 மணி.**

**பிறக்கின்ற புதிய ஆண்டை**
**தேவ சமூகத்தில்**
**ஆண்டவரின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்க**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

01.01.2004 புதுவருட காலை ஆராதனை மானிப்பாய். அளவெட்டி ஆகிய இடங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

**கல்வாரி குடும்பம்.**
89, பிறவுண் வீதி, கோக்குவில்.
(26555)(34-13-17-18)

## யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி
## 6ஆம் தர அனுமதி - 2004

**அனுமதிபெற விரும்புவோர் தைமாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே உண்டு. ஆங்கிலமொழிமூல கற்பித்தல், கணனிக் கற்பித்தல் நடைமுறையிலுள்ளது.**

-அதிபா
(C/32437)(35-13-17-18)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கி
வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்
**உயர்திரு.க.பாலசுப்பிரமணியம்**
அவர்களின் அன்புத் துணைவியார்
**திருமதி லோகநாயகி**

அவர்கள் 29.12.2003 அன்று காலமானதையிட்டு மிகவும் துயரமடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இலங்கை வங்கி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*
(26568)(35-13-18-17)
முகாமையாளரும்
ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கியின்
வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்
**திரு.க.பாலசுப்பிரமணியம்** அவர்களின்
அன்பு மனைவியார்
திருமதி
**லோகநாயகி பாலசுப்பிரமணியம்**

**அவர்கள் 29-12-2003 திங்கட்கிழமை காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் வருந்தும குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

முகாமையாளரும், ஊழியர்களும்.
ஒவிஸ் இக்கியூப்மென்ட் சேவிஸஸ்
(Office Equipment Services)
34, சேர் பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(26546)(34-13-18-17)

## SPOKEN ENGLISH With GRAMMAR

(Personal Classes)
By: Paris

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ஜேர்மன் (டொச்) வகுப்புகள் இனிய புத்தாண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
(பிரத்தியேக வகுப்புகளும் நடைபெறும்)
14-01-2004 இற்கு முன் கீழ்வரும் முகவரியில் அனுமதிக்கு விண்ணப்பிக்கவும்.

ஆசிரியர்: **சிவா**

தொடர்பு: **தே.வசீகரன்.**
**CES (Computer Electronic System)**
220, Kasthuriar Road, Jaffna.
(Opposite of J/Hindu Primary School)
T.P.: 021 222 5575,
077-6013624.
(13-17-18) (26576)

## தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் 9.10. O/L மாணவர்களுக்குரிய வினாத்தாள்கள், கையடக்க பாடக்குறிப்புக்கள் என்பனவற்றை தபாலில் பெற்றுப் பயனடைய ரூ.200/= மணியோடருடன் தொடர்புகொள்ளுங்கள்:

**தமிழ்,**
**த.பெ.எண்.10, வவுனியா.**
(26551)

## மரண அறிவித்தல்கள்

**சந்திரராசா கனகம்மா (தவம்)**

அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரராசா கனகம்மா 30.12.2003 காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அன்னம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற சந்திரராசாவின் மனைவியும் காலஞ்சென்ற விஜிதாவின் அன்புத் தாயாரும் பவளக்கொடி, புஸ்பராணி (தேவி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இளைய தம்பியின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம் பெற்று திருநெல்வேலி இந்துமயானத்தில் தகனக்கிரியை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-32343) **- குடும்பத்தினர்.**

**திருமதி பொன்னம்பலம்**
**சற்குணபாலதேவி**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

கேணியடி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த திருமதி பொன்னம்பலம் சற்குணபாலதேவி அவர்கள் 28.12.2003 அன்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலிஇந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.பொன்னம்பலம்
(கணவர்- இளைப்பாறிய ஆசிரியர்).

*கேணியடி,ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*
(26589)

## விக்னா கல்வி நிறுவனம்

பொருளியல் திரு.K. **உதயன்** B.B.A.. (Hons)
B.A. (பெரதேனியா)

**2004 மீட்டல்**

| | பிரிவு I Mon.,Wed.,Fri. (SLT) | பிரிவு II Sat.,Sun. |
|---|---|---|
| சந்தை சமநிலை, வரைபு | 8.30-9.30 | 8.30-9.30 |
| சென்மதி நிலுவை | 9.30-10.30 | 9.30-10.30 |
| தேசிய வருமானம் | 10.30-11.30 | 10.30-11.30 |
| இலங்கைப் பொருளாதாரம் | 12.30-1.30 | 12.30-1.30 |
| M.C.Q.,400 வினா மீட்டல் | | 10.30-11.30 |

2005 - 11.30-12.30 Sat.,Sun.
2006 - 7.30-8.30 Sat.,Sun.
ஆரம்பம்: 03-01-2004

**A/L 2006 கலை, வர்த்தக வகுப்புகள் 03-01-2004 8மணி**

(C/32435) (26-13-18-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு
31
~
10
~
1922



இறப்பு
01
~
12
~
2003

### அமரர் கந்தையா திரவியம்

அன்புடனும் பண்புடனும் பாரில் வாழ்ந்து
மறைந்த பாசமுள்ள தந்தையே! எம்முடன் நீங்கள்
இருந்த நாள்கள் என்றும் எம்நெஞ்சை விட்டகலா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியும் பல வழிகளில் எமக்கு உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.**

**இனறு (31.12.2003) புதன்கிழமை நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கினறோம்.**

*உங்கள் நினைவுடன்*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*வெங்கடேசன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(26567)(35-13-18-17)

## கண்ணீர் அஞ்சலி



எமது இலங்கை வங்கி
வடபிராந்திய பொதுமுகாமையாளா
**திரு.க.பாலசுப்பிரமணியம்** (பாலா)
அவர்களின் அன்புத் துணைவியா
**திருமதி பா.லோகநாயகி**

**அவர்களின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அன்புக்கும், பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து எம்மைவரவேற்று உபசரித்து இன்முகங்காட்டி நிற்கும் மலர்ந்த புன்சிரிப்புத தவழும் இனியமுகத்தை இனி எப்போது காண்போம்?**

**பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.**

உரிமையாளர்,
**லாலா சோப்** தொழிற்சாலை,
அச்சுவேலி.
(C/32434)(34-17-13-18)

## மரண அறிவித்தல்

### முத்தையா அழகரத்தினம்
**(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)**

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா அழகரத்தினம் அவர்கள் நேற்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் பாசமிகு சகோதரனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, வடிவேலு, நாகரத்தினம், பொன்னம்மா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, புவனேஸ்வரி, கருணாமூர்த்தி, யோகராசா (ஜேர்மனி), மகேந்திரராசா (சுவிஸ்), தேவராசா (சுவிஸ்), இரத்தினேஸ்வரி, லிங்கேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராஜசிவகுமார், பத்திநாதன், நவரத்தினராசா, நவசேனா (சுவிஸ்), புஸ்பராணி (ஜேர்மனி), சியாமளா (சுவிஸ்), வனிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 10 மணியளவில் அன்னாரது பூதவுடல் கலலுண்டாய் இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

*முத்தநயினார் கே.விலடி,*
*ஆனைக்கோட்டை.*
(26575)
தகவல்:
அ.கருணாமூர்த்தி (மகன்).
(13-17-18)




வதிரியைச் சேர்ந்த
**திரு. திருமதி செல்வநாயகம்**
**சுபா (ஆசிரியை)**
தம்பதிகளின்
அருந்தவப் புதல்வன்
**செல்வன் ஆஹாஷ்**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று புதன்கிழமை வதிரியில் கொண்டாடுகின்றார்.

அவர் ஆயகலைகளும் கற்று, சகல சௌபாக்கியங்களுடனும் சுகமாக வாழ வேண்டுமென அனைத்துத் தெய்வங்களின் ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:-*
அன்பு மாமா சுபாஸ்
ஆசை மாமா அருந்தவராசா
(சுதர்சன்)
அன்புச் சித்தி சுனேகா
ஆசைச் சித்தி சுகன்ஜா

(ஆசிரியர்), பாரததேவி.

பத்தியவத்தை, வதிரி மேற்கு, கரவெட்டி.

(C/32430) MATHAYAN Graphics

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு
பின்வரும் வேலை ஆள்கள்
உடன் தேவைப்படுகின்றனர்.

1. சாரதி(40 -60 வயதுக்குட்பட்டவர்கள்)
2. உதவியாளர்

இன்று (31.12.2003) புதன்கிழமை
நேரடியாக சமுகந்தரவும்
**வைற் கவுஸ் அந்தியகால சேவை,**
181, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.எண்:2222738. (26573)(36-12-13-32)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19-06-1922 — மலர்வு 25-05-1927



உதிர்வு 13-12-2002 — உதிர்வு 10-12-2002

திரு. திருமதி
## இராசரத்தினம் அன்னலட்சுமி

ஆண்டு ஒன்று ஆயிடினும் ஆறுதில்லை எம் இதயம்
ஈண்டு உங்களை நினைத்தே இப்பூவுலகில் வாழ்கின்றோம்
மீண்டு ஒருமுறை வந்தெமக்கு திருமுகத்தை காட்டீரோ?
ஆத்மசாந்திக்காக முருகமூர்த்தி விநாயகரை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இன்று (31-12-2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னார்களின் ஓராண்டு நினைவு அஞ்சலி நிகழ்வில் கலந்து இவர்களின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திப்பதோடு, நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும அன்புடன் அழைக்கின்றோம்.

*19,நாவலடி லேன்,*
*கேசாவில் பிள்ளையார் கோயிலடி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
-குடும்பத்தினர்.
(26570)(32-12-13)

# மரண அறிவித்தல்கள்

## நாகமணி சிவானந்தம்
### (ஆனந்தம், மெக்கானிக்)

சாவகச்சேரி, சங்கத்தானை, சாரதா வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகமணி சிவானந்தம் 27.12.2003 சனிக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ஹம்சலாவின் அருமைத் தந்தையாரும் விஷ்னுகாந்தனின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகமணி - அன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாபதி - வள்ளிப்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினர், சிவகுரு (துரை) மற்றும் அழகம்மா, சரஸ்வதி (கண்மணி), கைலாயப்பிள்ளை, செல்லையா, கணேஷ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, சறோஜினிதேவி, கோபாலபிள்ளை மற்றும் சின்னத்தம்பி, பூபதி மற்றும் திரவியம், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராஜதுரை, மோகனசெல்வம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகள், மருமகன்.

*சாரதா வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (26580)(12-13-32)

## திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம் அவர்கள் 29.12.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா (லக்ஷ்மி பவான்) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பகவதி அம்மாள் தம பதிகள் மற்றும் திருமதி திருச்செல்வம் கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் பாலசுப்பிரமணியத்தின் (உதவிப் பொதுமுகாமையாளர் - இலங்கை வங்கி) அன்பு மனைவியும், முரளிதரனின் (E wis Ltd.) அன்புத தாயாரும் செல்வநாயகி (லண்டன்), திலகம், ஜெயராஜா (சுவிற்ஸர்லாந்து), ரங்கநாயகி, தங்கநாயகி, காந்தன், ரவீந்திரன் ஜெயலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிதரன் (லண்டன்), ரத்தினா, உமா (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), கெங்கேஸ்வரி, மேகலா ஆகியோரின் பெரிய தாயாரும் ஜெகசோதி, ஜெகதீஸ்வரன், அன்னராசா, கணேசலிங்கம், மகேந்திரன் (ஜேர்மனி), கண்ணன் (ஜேர்மனி) வசந்தகுமாரி, சந்திரசேகரம், கஜன், நந்தினி, கிருபாமூர்த்தி (இணுவில்), கலைமகள் (கனடா), சந்திரேஸ்வரி (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சண்முகேஸ்வரி, கண்ணன், மைதிலி, சாந்தராஜ், அமிர்தராஜ், அரவிந் ஆகியோரின் அன்பு மாமியாரும் யதுரஷன், கோபிகா (லண்டன்), கௌதம் (பிரான்ஸ்), வினித் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை மாலை 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர் மடம் இந்துமயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பாலசுப்பிரமணியம்
உதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கைவங்கி.

*சிவன் கோவிலடி,*
*பருத்தித்துறை.* (26572)(12-13-32)


## நாகம்ஸ் சுன்னாகம்

தருண், த்ரிஸா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18 (ரீலஸ்) (பு.நே.)
தினசரி காட்சி : 11.00, 3.00.
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி
(C-31620)(12)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி
(ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு
KEOMA
இரவு 8.45 இந்த (பு.நே.)
(C-32175) (12)

## ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும்
சேரன், ரதி, மணிவண்ணன் நடித்த
சொல்ல மறந்த கதை (ரீலஸ்)
(சிறந்த குடும்பச் சித்திரம்)
10.30,2.30,6.30,9.30 (பு.நே.)
நாளை முதல்
திருமலை (சி-31577) (32)

## லிபேட்டி அச்சுவேலி



அஜித், மீராஜஸ்மின் நடித்த
ஆஞ்சநேயா (ரீலஸ்)
தினசரி காட்சி நேரம்: 3.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(C-31621) (32)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தசாமி சிவசோதி

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி சிவசோதி அவர்கள் நேற்று (30-12-2003) செவவாய்க கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் சு.கந்தசாமியின் அன்பு மனைவியும் சுவாமிநாதன், கலைச்செல்வி, சிவயோகன் ஆகயோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று புதன கிழமை (31-12-2003) பி.ப 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.இலட்சுமணன்
(மைத்துனர்)

*சங்குவேலி மத்தி,*
*மானிப்பாய்.* (26594)(32-12-13)

## வேலுப்பிள்ளை கந்தசாமி
### (CTB சாரதி)

கரவெட்டி மத்தி, கரவெட்டியைச சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தசாமி (C.T.B. சாரதி) 29.12.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக கணவரும், சிறீஸ்கந்தராசா, சிவானந்தராசா செல்வக்குமார், கலாநிதி (லண்டன்), நந்தகுமார் (அமரர்) ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (31.12.2003) புதன்கிழமை பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சோனப்பு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமபடி கேட்டுக கொள்கிறோம்.

தகவல்:
ச. புஸ்பகுமார்.
(மருமகன்)

*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.* (சி-32342)(12-13-32)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஸ்ரீமணி துரைச்சாமி

சோதிவேம்படி ஒழுங்கை, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி ஸ்ரீமணி துரைச்சாமி அவர்கள் நேற்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா துரைச்சாமியின் அன்பு மனைவியும துரைச்சாமி செல்லையாவின் அருமைத் தாயாரும் திருமதி கலாவல்லியின அன்பு மாமியாரும் பிரணவன், பிரசாந்தன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. செல்லையா (மகன்)
முகாமையாளர் - மஸ்கன்ஸ்,
யாழ்ப்பாணம்.

*சோதிவேம்படி ஒழுங்கை,*
*மானிப்பாய்.*
(26586)(12-13-32)

## சிவஞானம் சண்முகநாதன்

மானிப்பாய், மெமோறியல் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவஞானம் சண்முகநாதன் நேற்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சீத்தாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் பாலேந்திரன், விஜயலட்சுமி, விக்னேஸ்வரன், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் தெய்வேந்திரம் ஆகியோரின் சகோதரனும், புவனேஸ்வரி, சிவமலர், ஜெகநாத், காலஞ்சென்ற இந்திராதேவி, ஜெயபத்மலோசன், குணலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் சறோஜினி, சியாமளா, அருந்ததி (தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி), சிறிகரன் ஆகியோரின தகப்பனாரும் ரெட்ணசேகர், பகீரதன் (தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்) அவர்களின் மாமனாரும் தனுஜன், நதீசன், நிரோஜா, துளசிராம் சம்யுக்தன ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை காலை 9.30மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்.

*மெமோறியல் ஒழுங்கை,*
*மானிப்பாய்.* (26584)(13-12-32)

## ஆறுமுகம் பூரணம்

பலாலியை பிறப்பிடமாகவும் தோப்பு, அச்சுவேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பூரணம் அவர்கள் நேற்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகர் - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் மனைவியும் மனோகரியின் அன்புத் தாயாரும் சதுர்மதி (ஜெனா- மாணவி வேம்படி மகளிர் கல்லூரி), சயிந்தா (மாணவி - யா/ இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. வில்வராசா (மருமகன்).

*தோப்பு,*
*அச்சுவேலி.* (26592)(13-12-32)

## திருமதி இரததினசபாபதி தீபகாந்திஅம்மா
### (தலைவர், ஸ்ரீ வெய்யிலுகந்த விநாயகர் தேவஸ்தான பண்ணிசை மன்றம்)

செம்மணி வீதி, நாயன்மார்கட்டைச் சேர்ந்த திருமதி இரத்தின சபாபதி தீபகாந்தி அம்மா அவர்கள் 29.12.2003 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.வி.வசீகரன.

*21,செம்மணி வீதி,*
*நாயன்மார்கட்டு.* (26577)(13-12-32)

## திருமதி பாக்கியம் இராசரத்தினம்

வளாக ஒழுங்கை, திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் இராசரத்தினம் 25.12.2003 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரபாகு - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் இலங்கைநாயகம் (இளைப்பாறிய சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி - மன்னார்), லக்கினேஸ்வரி, மங்கையர்க்கரசி (கனடா), அரசநாயகம் (ஜேர்மனி), செல்வநாயகம் (ஜேர்மனி), பாக்கியலட்சுமி, இராசேஸ்வரி (கனடா), தனநாயகம் (கனடா), சியாமளா (கூட்டுறவுப் பரிசோதகர் - கூட்டுறவுத் திணைக்களம், மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானேஸ்வரி, அமரர் நித்தியானந்தன், இராஜகோபால் (கனடா), செல்வப்புனிதவதி (ஜேர்மனி), திலகவதி (ஜேர்மனி), அமரர் குகதாஸன், பேரின்பசிவம் (கனடா), சாந்தினி (கனடா), சண்முகலிங்கம் (பிரதி அதிபர், மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் சிவக்கொழுந்தின் அன்புச் சகோதரியும் அமரர் செல்வரட்ணம், அமரர் தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி தயாபரன் நாகலதா (சர்வோதயம் - கொழும்பு), இலங்காதரன், திருமதி குலரத்தினம் யசோதா (ஆசிரியை, யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), முகுந்தன், திருமதி சந்திரகுமார் கவிதா (கிராம உத்தியோகத்தர், J/98), நிமலன், ரயூரன், ராஜினி, ரஜந்தினி, ரஜிதா, அன்பழகன், அரவிந்தன், அன்பரசி, அஜந்தன், அனுஷா, மயூரி, பிரியதர்சன், ஐங்கரன், பிரகாஸ், பிரதீபா, றதீஸ், சிந்துஜா, நிரோசா, நிதர்ஷன், கஸ்தூரி, நிதாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் த.சாயிஸ்ருதியின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.இலங்கைநாயகம்.
(மகன்)

*49, வளாக வீதி,*
*திருநெல்வேலி தெற்கு,*
*யாழ்ப்பாணம்.* (26582) (12-13-32)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை இலங்கையில் உள்ளவர்கள் மட்டுமன்றி உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் கேட்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேவத்த, சேர்ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பயிற்சிக்கல்லூரியின் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ரியர் அட்மிரல் தயா தர்மபிரிய வடக்கு கடற்படை கட்டளைத்தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதியான ரியர் அட்மிரல் வசந்த கரன்னாகொட மேற்குக் கடற்படை கட்டளைத தளபதியாகவும், மேற்குக் கடற்படை கட்டளைத் தளபதியான ரியர் அட்மிரல் சரத் ரத்னகீர்த்தி கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

## மனிதஉரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மகாலிங்கம் தொடர்பான விசாரணை முடிவை தமக்குவிரைவில் அறிவிக்குமாறு அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் கடமையாற்றிய மகாலிங்கத்தின் நிலையை அறியமுடியாமல் இருப்பதால் அவரது கொடுப்பனவுகள் எதனையும் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் அவரது குடும்பம் கஷ்டப்படுகின்றது. வல்வெட்டித்துறைக் கடலில் வைத்து இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல எத்தனித்தபோது அவருடன் மேலும் நான்கு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் திருகோணமலை கடற்படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று அவரது சகோதரி மகாதேவி தெரிவித்தார்.

## ஏ-9 பாதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரத்தை இன்று இரவு 9 மணிவரை நீடிப்பதாகவும் - பளை மற்றும் புளியங்குளம் சோதனை நிலையங்கள் இதற்கு வசதியாக 9 மணிவரை திறந்திருக்கும் என்றும் புலிகள் அறிவித்திருந்தனர்.

இதேவேளை, ஏ-9 பாதை ஊடான பயணிகள் போக்குவரத்துக்காக முகமாலை, ஓமந்தை சோதனை நிலையங்கள் இன்று இரவு 9மணிவரையும் திறந்திருக்கும் என்று படைத்தரப்பு அறிவித திருந்தது.

ஆனால் சூனியப் பிரதேசத்தில் மின் விளக்கு வசதி இல்லாததால் இன்றும் நாளையும் மாலை 6.30 மணி வரையே தமது பிரசன்னம் இருக்கும் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இது விடயமாக கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரியிடம் கேட்டபோது, போக்குவரத்தைக கண்காணிக்கும் பணியில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மாலை 6.30 மணிக்கு விலக்கியபின்னர் இரவு 9 மணிவரை தமது அமைப்பினரின் பிரசன்னம் இருக்கும் எனத் தெரிவிததார்.

இன்று மாலை 6.30 மணிக்குப் பின்னர் பாரவூர்திகள் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் -

பயணிகள் மட்டுமே அனுமதிக்கப் படுவர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

## ரயில்சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓமந்தை பழைய ரயில் நிலையம் வரை நீடிப்பது குறித்து அப்போது ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது.

D.C.M பழம் றோட், கந்தர்மடம்

A\L 2006

கலை, வர்த்தகம்

| | |
|---|---|
| பொருளியல் | - வரதராஜன் |
| கணக்கீடு | - முகுந்தன் |
| வணிகக் கல்வி | - உமாகாந்த் |
| அளவையியல் | - மோகன் |
| இ.நாகரீகம் | - ஸ்ரீஸ் |
| தமிழ் | - காந்தன் |
| புவியியல் | - குமரன் |

ஆரம்பம் 2-1-04 வெள்ளி 4.00 மணி (ப.நே)

BITSMANS கல்விநிறுவனம் மானிப்பாய்.

A/L 2006

★ கணித ★ உயிரியல் ★ வகுப்புகள்

| | |
|---|---|
| பௌதிகம | திரு.ஜெயசீலன் |
| இராசயனம் | திரு.மகேஸ்வரன் |
| இணைந்த கணிதம் | திரு.பிரதீபன் |
| உயிரியல் | திரு. ஞானேந்திரன், திரு. தயாபரன் |

ஆரம்பம்: 01.01.2004 வியாழன் 9.00 a.m.

(26547)(12-18)

ஸ்ரீ கல்வி நிலையம் கோண்டாவில்

A/L 2006

வர்த்தகப்பிரிவு

கணக்கீடு திரு.பாலவாசன்

வணிகக்கல்வி திரு.யசோ

பொருளியல் திரு.உதயன்

ஆரம்பம்: 03.01.2004 சனி 3 மணி.

பொருளியற் கல்லூரி

(பெருமாள் கோயில் அருகில்) நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(இணுவில் மத்தியகல்லூரி அருகில்) கே.கே.ஸ். றோட், இணுவில்.

A/L 2006 (இரு இடத்திலும்) கலை,வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: 03.01.2004 சனி

| பாடம் | யாழ்நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P சர்மா | R.P சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| நாடக அரங்கியல் | சுகந்தன் | சுதன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| அரசியல் | றஜீவன் | றஜீவன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

அனுமதியினை இரு இடத்திலும் தினமும் காலை 8.30 - 12.30 வரை பெற்றுக்கொள்ளவும். (26474)

ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சை

பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம் :01-01-2004 10மணி (ப.நே.)

வியா., வெள்., சனி, ஞாயி. (10-12)

நியூட்டன் ஆரிய குளம்சந்தி அருகில், யாழ்நகர்.

(26532)

BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்.

A/L 2006

கலை, வர்த்தகம், கணித உயிரியல் வகுப்புகள்

(எமது வழமையான ஆசிரியர் குழு)

ஆரம்பம்: 01.01.2004 வியாழன் 9.00

(26548)

BRIGHTMAN

நாவலர் வீதி, யாழ்நகர்.

A/L 2006

கலைப் பிரிவு

★ ஆரம்பம்: 03-01-2004 SAT .-8.00 a.m.

தமிழ: N.பாலா

அளவையியல்:P.கமல்

இ.நாகரிகம்:திரு.பத்மராஜா

புவியியல்:திரு.I.S.ஜெகன்

பொருளியல:திரு.P.சண்

நாடகம:திரு.P.தர்மா

குறிப்பு: விண்ணப்பங்களை பதிவுசெய்துகொள்ளவும்.

(26363) (12)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி குழந்தைவேலு

(தம்பியண்ணா)

பருத்தித்துறை ஓடக்கரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி குழந்தைவேலு (ஓய்வுபெற்ற மின்சார ஊழியர் நகரசபை பருத்தித்துறை, வாணி சவுண்ட் உரிமையாளர்) அவர்கள் நேற்று 30.12.2003 காலமானர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஓடக்கரை, பருத்தித்துறை.(26599)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செபமாலை விசுவாசம்

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி செபமாலை விசுவாசம் அவர்கள் நேற்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் - ஆரோக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவரான விசுவாசத்தின் பாசமிகு மனைவியும் ஜெகநாதன் (கொழும்பு), பாக்கியநாதன் (சுவிஸ்), மேரியசிந்தா, அருட்சகோதரி ஜெயம் (அன்புக் கன்னியர்- வவுனியா), மரியநாதன், மேரிநவம், மேரிசறோஜா (லண்டன்), மரியபானு (நோர்வே) ஆகியோரின் அருமைத் தாயாரும் அருட்தந்தை ம.போல் நட்சத்திரம் (அ.ம.தி) அவர்களின சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.12.2003) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் 3.30 மணிக்கு திருப்பலியின் பின்னர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

உரும்பிராய். (26583)(12-18)

தகவல்: அருட்சகோதரி ஜெயம் (மகள்-அன்புக்கன்னியர்), அருட்திரு.ம.போல் நட்சத்திரம் (அ.ம.தி - பெறாமகன்).

## அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்

### (அழகக்கோன், இளைப்பாறிய ஆசிரியர்)

மிருசுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் நேற்று 30-12-2003 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபீனத்தின் அன்புக் கணவரும், நிக்கிலஸ் (ஓய்வூதியர் - முருங்கன்), பரமேஸ்வரி, மரியதாஸ் (திணைக்களச் சாரதி) இராஜேஸ்வரி, அன்ரனி தவச்செல்வம் (ஆசிரியர்), மேரிகெசில்டா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆரோக்கியம், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, கமலினி, மரியரட்ணம், சுகந்தினி (விரிவுரையாளர் யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி), சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 31.12.2003 பிற்பகல் 3.00 மணிக்கு புனித நிக்கிலஸ் ஆலயத்தில் நடைபெற்று, மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில் தெற்கு; மிருசுவில். (26593)(12-18)

தகவல்: சிறீதரன் (பத்மசிறி - மருமகன்)

## திருமதி கமலாம்பிகை கனகசுந்தரம்

தும்பளை மேற்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி கமலாம்பிகை கனகசுந்தரம் நேற்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற குமரேசு தம்பதிகளின் மருமகளும் கனகசுந்தரம் (இலங்கை மின்சார சபை இளைப்பாறிய உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவஞானசுந்தரத்தின் அன்புச் சகோதரியும், உமாவின் அன்புத் தாயாரும், இரத்தினம், துருவசோதி காலஞ்சென்ற சதாசிவம், பாக்கியலட்சுமி, பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். -

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை 12.00 மணியவில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை கோரியடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை மேற்கு, பருத்தித்துறை. (32340)(12-18)

தகவல்: கு.கனகசுந்தரம் (கணவர்).

## செல்லையா சேனாதிராசா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சேனாதிராசா அவர்கள் நேற்று (30.12.2003) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சிவசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரரும் சிவராணி, லோகநாதன், சிவஞானவதி, லலிதாராணி, இராஜராஜேஸ்வரி, ஈஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.12.2003) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (26596)(12-18)

தகவல்: சிவக்கொழுந்து (மனைவி) லோகநாதன் (மகன்).

## செல்வி சின்னையா குணசவுந்தரவல்லி

### (கக்ஸ் பார்மஸி - கொழும்பு)

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சின்னையா குணசவுந்தரவல்லி அவர்கள் 29.12.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மகளாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.16, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (26598)(12-18)

தகவல்: சி.மங்கையர்க்கரசி (சகோதரி), சி.லோககுகதாசன் (சகோதரன் -இலங்கை மின்சார சபை ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்), லோ.சந்திராவதி (மைத்துனி - ஆசிரியை கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.